# சாளரம்

இதழ் : 01 | 21 நவம்பர் 2021 | ஹிஜ்ரி 1443

## கொவிட் 19 அசாதாரண சூழ்நிலையில் தொலைநிலைக் கல்வியின் எதிர்பார்க்கைகளும், அடைவுகளும் ஓர் மதிப்பீடு



**STUDENTS' RESEARCH FORUM FOR SOCIAL RESEARCHES - 2021**
**FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE**
**SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA**

# சாளரம்


**ஆசிரியர்**

சாளரம் சஞ்சிகைக்குழு
சமூக ஆய்வுகளுக்கான
மாணவர் ஆய்வு மன்றம்.

**பதிப்புரிமை**

சமூக ஆய்வுகளுக்கான
மாணவர் ஆய்வு மன்றம்.
இஸ்லாமியக் கற்கைகள்
மற்றும் அறபு மொழிப் பீடம்,
இலங்கை தென் கிழக்குப்
பல்கலைக்கழகம்.

**வெளியீடு**

சாளரம்
வெளியீட்டுக் குழு,
சமூக ஆய்வுகளுக்கான
மாணவர் ஆய்வு மன்றம் 2021

**கணினி வடிவமைப்பு**

அகீப் நஸ்ர்
எம்.என்.எப். சில்பா

**பக்கங்கள்**

61

STUDENTS' RESEARCH FORUM
FOR SOCIAL RESEARCHES - 2021

**பெரும்பொருளாளர்**

பேராசிரியர் எஸ். எம். எம்.
மஸாஹிர்
பீடாதிபதி,
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும்
அறபு மொழிப்பீடம்
இலங்கை தென்கிழக்கப்

**ஆலோசணைக்குழு**

எம். சி. எஸ். சாதிபா
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும்
அறபு மொழிப்பீடம்
இலங்கை தென்கிழக்கப்
பல்கலைக்கழகம்.

எம். வை. எம். சுஹீறா
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும்
அறபு மொழிப்பீடம்
இலங்கை தென்கிழக்கப்
பல்கலைக்கழகம்.

எப். எச். ஏ. ஷிப்லி
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும்
அறபு மொழிப்பீடம்
இலங்கை தென்கிழக்குப்
பல்கலைக்கழகம்.

எம். ரீ. ஹபீபுள்ளாஹ்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு
மொழிப்பீடம்
இலங்கை தென்கிழக்கப்
பல்கலைக்கழகம்.

# STUDENTS' RESEARCH FORUM FOR SOCIAL RESEARCHES - 2021
# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## COMMITTEE MEMBERS

PRESIDENT - M.A.M. ALHAM
VICE PRESIDENT - M.M.F. NUSHEEDHA
SECRETARY – A. IJAS MOHAMED
ASS. SECRETARY - A.F. NATHA
TREASURER - M.A.M. ASLAM
EDITOR – Y.F. FAHIJA

SECRETARY OF RESEARCH – T.T. AAYSHA
SECRETARY OF PUBLICATION – H.D.F. BADUSHA
SECRETARY OF TRANSLATION – M.F.F. SAFNA
SECRETARY OF INNOVATION – M.A.F. ASHFA
SECRETARY OF COMMON – S.M. SASREEN
SECRETARY OF HISTORY GROUP - M.J.F. SANA ANJUM
MEMBER – J.N.M. AKEEF
MEMBER – A.H.J.F. SHAHIDHA

## SALARAM BOARD

EDITOR IN CHIEF:
H.F. BADUSHA

CO EDITOR – M.N.F. ZILFA
CO EDITOR – J.N.M. AKEEF
A.H.J.F. SHAHIDHA
M.R.F. RIFANA
M.S.F. FAHMITHA
R.F. ASLA
K.C.F. NASMA
B.F. AAKKILA
M.N.M.F. AZMY
CM.M.F SHAFIYA

# உள்ளடக்கம்




தற்காலத்தில் கல்வி வரமா? சாபமா? — பக்கம் 10



தொலை நிலைக் கல்வியின் இன்றைய நிலை...! — பக்கம் 23



ஏழ்மையாய் மாறிவிட்டேன் — பக்கம் 33



கொரோனவும் நானும் — பக்கம் 43



කොරෝනා නුඹ ඇවිදින් දැනට අවුරුදු දෙකක්...... — பக்கம் 58



التعليم عن بعد بين توقعاته وتحقيقاته اثر ظروف كوفيد ١٩ — பக்கம் 60



# கொவிட் அசாதாரண சூழ்நிலையில் தொலைநிலைக் கல்வியின் எதிர்பார்க்கையும் அடைவுகளும்

NOORUL SHIFA JAFEER
4TH YEAR
FACULTY OF ISLAMIC STUDIES
& ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF
SRI LANKA

இன்று உலகின் பெரும்பாலான நாடுகள் எதிர்கொள்ளும் ஓர் நெருக்கடிகாகவே இவ் கொரோனா அசாதாரண சூழ்நிலை காணப்படுகின்றது. அந்தவகையில் இவ் அசாதாரண சூழ்நிலையில் மக்கள் தம் அன்றாட கருமங்களை முன்னெடுத்துச் செல்ல பல்வேறு உத்திகளைக் கையாண்டு கொண்டிருப்பதை நாம் அவதானிக்க முடிகிறது. அதிலும் குறிப்பாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக தொலைநிலைக் கல்வியெனும் எண்ணக்கருவின் கீழ் பல்வேறு விதமான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனடிப்டையில் தொலைநிலைக் கல்வியென்றால் என்னவென்று நோக்குமிடத்து தொலைதூரத்தில் உள்ளவர்கள் இணையத்தள வசதிகளைப் பயன்படுத்தி வீட்டில் இருந்தவாறே தம் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்தல் என இலகுவாகப் பொருள் கொள்ளலாம். முன்பெல்லாம் இத் தொலைநிலைக் கல்வியானது வெளிநாடுகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் தொழிநுட்பம் முன்னேற்றமடைந்த நாடுகளுக்குள் மட்டுமே சுருங்கியதாகவே காணப்பட்டது. ஆனால் இன்று இவ் கொவிட் சூழ்நிலையைத் தொடர்ந்து பெரும்பாலான நாடுகளில் எல்லோருக்கும் பரீட்சயமான ஒரு விடயமாக இவ் தெலைநிலைக் கல்வி மாறி வருவதனை அவதானிக்க முடிகிறது.

காலங்கள் வீணே கழியாது மாணவர்கள் தம் ஆளுமைகளை வளர்த்து காத்திரமான பங்களிப்புக்களை நாட்டிற்கு வழங்க வேண்டுமென்ற நன்னோக்கில் இவ்வாறான முன்னெடுப்புக்கள் முன்னெடுக்கப்பட்டாலும் கூட இத் தொலைநிலைக் கல்வி மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்குகள் அடையப்பட்டுள்ளனவா? என்பது தொடர்பிலும் நாம் சற்று சிந்திக்க வேண்டியுள்ளது. உதாரணமாக இன்றைய இலங்கைச் சூழலை எடுத்துக் கொண்டால் இங்கு வாழும் எல்லா மாணவர்களும் வசதியான மாணவர்கள் என்று கூறுவதற்கில்லை. அதேசந்தர்ப்பத்தில் ஒரே வீட்டிலேயே கல்வி பயிலும் எத்தனையோ பிள்ளைகள் (சகோதரர்கள்) உள்ளனர். எனவே அவர்கள் அனைவருக்கம் இத் தொலைநிலைக் கல்வி மூலம் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதானது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு மிகப் பெரும் சவாலாக இருக்கம் அதேவேளை பெற்றோரும் இவ் எல்லாப் பிள்ளைகளின் தேவைகளையும் ஒரேநேரத்தில் நிறைவேற்றுவதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனால் மாணவர்கள் உட்பட பெற்றோரும் கூட மனஅழுத்தங்களுக்க உள்ளாகின்றனர். இது மாணவர்களில் கல்வி மனநிலையிலும் பாதிப்புச் செலுத்துகின்றது.

அத்துடன் வீட்டில் இருந்தவாறு இவ் தொலைநிலைக் கல்வியை முன்னெடுப்பதற்கான அமைதியான சூழல் எல்லா மாணவர்களுக்கும் சரியான அமைப்பில் கிடைக்கும் என்பதையும் உறுதியாகக் கூற முடியாத அதேவேளை எல்லா இடங்களிலும் கல்வி கற்பதற்கான Coverage பிரச்சினையும் மிக முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகிறது. எனவே மாணவர்கள் மத்தியில் தகவல்கள் சரியாகப் போய்ச் சேருமா? என்பதும் கேள்விக்குறியாகவே காணப்படுகிறது. அதேதருணம் தொலைநிலைக் கல்வியின் மூலம் தற்சமயம் வீடுகளில் இருந்தவாறே மாணவர்கள் திறந்தநூல் பரீட்சை முறையை எதிர்கொள்வதானது மாணவர்களது சரியான நிலைப்பாட்டை அறிய வழிவகுக்குமா? என்பதும் வினாக்குறியாகவே தொக்கி நிற்கிறது. அதுமட்டுமல்லாது முன்பெல்லாம் பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சிகளைப் பெற்றுத் தேறும் மாணவர்கள் இன்று வீட்டில் இருந்தவாறே தம் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதானது போதுமான அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள வழிவகுக்கமா? என்பதும் கேள்விக் குறியாகவே காணப்படுகிறது.

எனவே தொகுத்து நோக்கும் போது இவ் கொவிட்-19 சூழ்நிலையில் இவ் தொலைநிலைக்கல்வி மூலம் மாணவர்கள் பற்பல கற்கைகளை தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் தொடர்வதற்கான, கற்பதற்கான வாய்ப்புக்களைப் பெற்றிருந்தாலும் அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்குகள் முழுமையாக அடையப் பெற்றுள்ளனவா? என்பதில் சந்தேகமே நிலவுகிறது என்பது புலனாகிறது.

**FASLUL FARISA ASADH, 3RD YEAR**
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

# சூழ்நிலைக்கேற்ற கல்வி

ஓராண்டு கடந்துவிட்டது இன்னும்
ஓயவில்லை கோரோனாவின் கோரம்.

சீனாவின் வூஹானிலிருந்து ஊற்றெடுத்தே
முழு உலகையும் ஆட்டவிட்டே
வீட்டோடு முடக்கிவிட்டதே!

காலத்திற்கேற்ப மனிதனும்
மாறத்தானே வேண்டும்.
இளமையிற் கல்வியை
வழங்கத்தானே வேண்டும்.

பாலர் முதல் பல்கலை வரை
கற்றோரும் கற்பித்தோரும் வீட்டோடு
இலவசக்கல்வியும் இணையத்தோடு
இரு தரப்பும் இது பற்றியே முறைப்பாடு.

கரும்பு போன்ற கணிதம் பலருக்கு கசப்பு
இணையத்தின் வழியே கணிதம்
இனித்தவர்களுக்கே கசப்பு.

விஞ்ஞான கூடமும் தொழினுட்ப அறையும்
நூல் நிலையமும்
செல்லத்தான் முடியவில்லை
குழுக்கற்றலும் செயற்பாடும்
சுற்றுலாவும் களப்பயணமும் இயலவில்லை.
கவரேஜ் இல்லாவிட்டால் கற்பதே விளங்காது
மின்தடை வந்தால் மிகுதிப்பகுதி புரியாது.

படிப்பென்ற பெயரில்
பல்லாயிரம் செலவு செய்து
போ(F)ன் ஒன்று வாங்கி
பப்ஜியும் டிக்டொக்கும் புகுந்தே
படிப்பையும் பாழாக்கிவிட்டதே!

கத்தி தான் என்றாலும்
காய்கறியையும் நறுக்கலாம்
கழுத்தையும் அறுக்கலாம்.

இணையத்தில் இலவச வகுப்பும் வலம் வர
வீட்டாரனைவரும் இணைந்து கற்க
இதுவல்லவா வாய்ப்பு.

எதிர்மறையை ஒழித்து
நேர்மறையாய் சிந்தித்தே
இயலாமையையும் இல்லாதொழித்தே
முனைப்புடன் செயற்படுவோம்.



# கல்வித்தாகத்தை நீக்கும் தொலைநிலைக் கல்வி

**K.L.F. AADHIRA (SEU/18/IC/083)**
2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES
& ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF
SRI LANKA

கொவிட் 19 காலத்தில் நிலவுவது போல் நீண்ட அசாதாரண சூழ்நிலை நாம் இதுவரைக்காலமும் சந்தித்தது இல்லை என்பது நிதர்சன உண்மையாகும். 2019 ஆம் ஆண்டு டிசம்பர் சீனாவில் தோற்றம் பெற்ற கொரோனாவின் கோரத்தாண்டவம் நம் அனைவரின் வாழ்கையையும் புரட்டிப்போட்டு விட்டது எனலாம். அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் அரபு நாடுகளைக்கூட கொரோனா உயிர் கொல்லி நோய் விட்டுவைக்கவில்லை. இக்கொரோனாவின் கடுமையான சவால்களைச் சந்திக்க வழியில்லாமல் உலக நாடுகள் அனைத்தும் திணறித் தவிக்கின்றமை காண முடிகின்றது.

கொவிட் 19 தொற்று நோயின் செல்வாக்கினால் இன்று அனைத்து செயற்பாடுகளும் முடக்கப்பட்டு அனைவரும் வீட்டோடு ஒதுங்கியிருக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இதனால் உலக நாடுகளில் அரசியல், பொருளாதாரம், சமூக உளரீதியாக பல்வேறு தாக்கங்கள் இடம்பெற்று வந்தாலும் தரமான, வளமான கல்வியே வலுவான பொருளாதாரத்தை உருவாக்கும் என்பதால் கொரோனாவால் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் கல்வியை மீட்டெடுப்பது அதைவிட முக்கியமானதாகும். அந்தவகையில், கொரோனாவால் 160 கோடிக்கும் அதிகமான மாணவர்களின் கல்வி பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாகவும், கல்வி அமைப்பு பெருமளவு சிதைந்து விட்டதாகவும் கல்வியின் நிலைக்குறித்து ஐ.நா.வின் சமீபித்திய அறிக்கை தெரிவிக்கிறது. அத்தோடு, இத்தொற்றின் பரவலால் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சி கண்டு மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்பட சாத்தியமுள்ளது என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

அந்தவகையில், உலகம் முழுவதும் ஜனவரி, மார்ச் மாதத்தில் மூடப்பட்ட பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், கல்வியற் கல்லூரிகள், தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் கொவிட் 19 தொற்று நோய் குறைந்து விடும் என்று எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாற்றம் ஒன்றே மிஞ்சியது. இதனால் கொவிட் 19 உடன் வாழப்பழகிக் கொண்டு மாணவர்களின் கல்வி நிலை மேலும் இடைநிறுத்தப்பட்டால் பின் விளைவு பாரியதாக இருக்கும் எனக்கருதி வீட்டில் இருந்தவாறே பாதுகாப்பான முறையில் தொலைநிலைக்கல்வி முறையை உலக நாடுகள் அனைத்தும் பின்பற்றியது. தற்காலத்தில் மாணவர்கள் வீட்டில் இருந்தே கல்வி கற்பதற்கான அனைத்து வசதிகளையும் அந்நாட்டு அரசாங்கம் செய்து கொடுக்கின்றது. பல்வேறு இணையத்தளங்கள் மூலம் ஒவ்வொரு வகுப்பிற்குமான பாடத்திட்டங்கள், பயிற்சிகள், மீட்டல் பயிற்சிகள், மாதிரி வினாத்தாள்கள் போன்ற பல்வேறு செயற்பாடுகள் பல மொழிகளிலும் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தப்பட்டுள்ளன.



# கொவிட் 19 அசாதாரண சூழ்நிலையில் தொலைநிலைக் கல்வியின் எதிர்பார்க்கைகளும், அடைவுகளும் ஓர் மதிப்பீடு


**FATHIMA SAMEERA THOWFEEK**
1ST YEAR
FACULTY OF ISLAMIC STUDIES
& ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF
SRI LANKA


கல்வி என்பது இவ்வுலகில் பெரிதும் மதிக்கப்படுகின்ற ஒன்று. கல்வி ஒன்றே இந்த உலகை மாற்றக்கூடிய சக்தி வாய்ந்த ஆயுதம் என்ற நெல்சன் மண்டேலாவின் வாக்கு கல்வியின் உயரிய தன்மையையும், அதனை மனிதன் பெற்றுக் கொள்ள கற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் குறிக்கின்ற அதேவேளை எவ்வாறான சூழ்நிலைகளிலும் கல்வி அறிவே மனிதனுக்கு உறுதுணையாய் அமைகின்றது என்பதையும் சுட்டி நிற்கின்றது.

இதன் அடிப்படையில் தற்போது நிலவுகின்ற கொவிட் 19 அசாதாரண சூழ்நிலை காரணமாக நாட்டின் அனைத்து சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் மாணவர்களுக்குரிய கல்வியை பெற்றுக்கொடுப்பதில் கல்விசார் அமைப்புக்களால் (Online Classes) இணையவழி கற்கை வாயிலாகவும் கல்வி போதிக்கப்படுகின்றது. இவ்வாறான நடைமுறைகள் சில உயரிய நோக்கங்களையும், எதிர்பார்ப்புக்களையும் அடிப்படையாக வைத்தே செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் கல்வியியற் செயன்முறைகளில் மாணவர்களை தொடர்ந்தேர்ச்சியாக வைத்திருப்பதற்கும் இன்னும் இவ்வாசாதாரண சூழ்நிலையைக் காரணம் காட்டி மாணவர்களின் கல்விநிலை பின்னடைந்து செல்வதைவிட்டும் அதனை மேம்படுத்துவதற்கும் சூடிய ஒன்றாக இத் தொலைநிலைக்கல்வி காணப்படுகின்றது.

இன்னும் வீட்டினுள்ளே சுயதனிமைப்படுத்தலை கடைப்பிடிக்க வேண்டிய இக்கால கட்டத்தில் வெளியிற் சென்று கல்வியைப் பெறுவது கடினம் இதன்போது கல்வி நிறுவனங்களால் நடாத்தப்படுகின்ற நிகழ்நிலை (Online) கல்வி வகுப்புக்களில் கலந்து கொண்டு மாணவர்கள் தமக்குத் தேவையான கல்வியை பெற்றுக் கொண்டு அதில் அவர்கள் ஆர்வத்துடன் செயற்பட வேண்டும் என்பதும் இக்கற்கை முறையின் பிரதான எதிர்ப்பார்ப்புகளில் ஒன்றாகும்.

அடுத்து ஓர் பிரதான அம்சமாக காலநேரங்கள் வீணடிக்கப்படாமல் மாணவர்கள் தத்தமது கல்விநிலையங்கள் திறக்கப்படும் வரை காத்திருக்க வேண்டியதன் அவசியத்தை தவிர்த்து அவர்கள் மேற்கொண்டு படிப்பை தொடர வேண்டும் என்றும் இங்கு எதிர்பாக்கப்படுகின்றது. இதனால் மாணவர்கள் மட்டுமன்றி வீட்டில் வெறுமனே வீற்றிருக்கக் கூடியவர்களும் தங்களுக்கான அறிவை மேம்படுத்திக் கொள்ளகூடிய சிறந்ததொரு சந்தர்ப்பமாக இது அமைகின்றது.

குறித்த வட்டாரத்துக்குள் முடக்கப்பட்டிருக்கின்ற இந்நிலையில் மன அழுத்தங்கள், மன சோர்வுகள் போன்ற உளநோய்களுக்கு ஆளாக வேண்டி ஏற்படலாம் இதன்போது கொவிட் 19 அசாதாரண சூழ்நிலையில் நேரடியாகச் சென்று சிகிச்சை பெறுவதன் சாத்தியமின்மையை கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற தூரநிலைக்கல்விசார் அமர்வுகளில் கலந்து தங்களுக்கான ஆலோசனைகளைப் பெறவேண்டும் என்றும், உள ஆரோக்கியத்தை பேணிக் கொள்வதன் ஊடாக கல்வியில் அதிகம் ஈடுபாடு காட்டக்கூடிய ஒன்றாக இது அமையும் என்றும் எதிர்பார்க்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

காலத்தால் அழியாதது கல்வி என்ற அடிப்படையில் கல்வியை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு ஆரம்பம் செய்து வைக்கப்பட்ட இத் தொலைநிலைக் கல்வியானது அனைவரிடத்திலும் பெரிதும் வரவேற்கத்தக்கதாகவும், கல்வி உலகின் பங்காளியாகவும் அமைந்திருக்கின்றது. இதனால் பயனடைந்தோரின் எண்ணிக்கையில் வரையறுத்துவிட முடியாது. கொரோனா காலத்தின் கல்வித்தாக்கத்தை தீர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பை இது பெற்றுத் தந்துள்ளது.

சில குறுகிய கால வரையறைகளைக் கொண்ட கற்கைநெறிகளில் அனேகமானோர் சான்றிதழ்வரை தங்களது கல்விப்பயணத்தை தொடர்ந்துள்ளனர். அதுமட்டுமன்றி முடக்கத்தால் சோம்பேறித்தனத்தில் வீற்றிருந்தோர் உற்சாக நிலைக்கு திரும்பவும் நேர முகாமைத்துவத்துவத்தை பேணிக் கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தையும் அடைந்து கொண்டுள்ளனர். மற்றுமொரு விடயமாக தொழிநுட்ப வீரத்தில் தொலைநிலையில் இருந்தோர் இத்தொலைக்கல்வியால் முன்னேற்றகரமான ஒரு நிலையை அடைந்துள்ளதோடு தமது எண்ணங்களையும், வண்ணங்களையும் தாமே வடிவமைத்து அதனை சமூகமயமாக்குகின்றனர். மேலும் இக்கல்வியால் மடமைத்தனத்தை தவிர்த்து தேடிக்கற்றல் அல்லது தேடிப்படித்தல் என்ற ஒரு சிறந்த கற்றல் முறைமைக்கு பழக்கப்பட்டுள்ளனர்.

இந்த தொலைகல்வியின் ஊடாக எத்தகைய நன்மையான அடைவுகள் கிடைக்கப்பெற்ற போதிலும், அதற்கு எதிர்மாற்றமான அம்சங்களும் இருக்கவே செய்கின்றன. சில மாணவர்கள் தங்களது வறுமை நிலையை காரணம்காட்டி பின்தங்கிய நிலையில் காணப்படுவதோடு வேறு சில மாணவர்கள் இக்கல்விமுறைமையில் நேரடி கல்வி முறைமையில் அடைய முடியுமான முழுமையான பயனை, தெளிவை அடைந்து கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அத்தோடு சில கற்கைகளில் பரீட்சைகளும் நிகழ்நிலை (Online) ஊடாகவே இடம்பெறுவதால் தங்களது திறமைகளை சரியான முறையில் வெளிக்கொணர்வதில் சிரமப்படுகின்றனர்.

இவ்வாறாக தொலைக்கல்வியினூடே சில நன்மையான அடைவுகளையும், வேறுசில பாதகமான அடைவுகளையும் பெறத்தக்கதாகவுள்ளது. எது எவ்வாறாயினும் காலத்துக்கு மிகவும் பொருத்தமாகவும், பயன்மிக்கதாகவும் அமைந்துள்ள இக்கல்வி முறைமையினூடாக அனைவரும் சிறந்த நல்லபல அறிவார்ந்த அம்சங்களை கற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஒவ்வொருவரும் புரிந்துணர்ந்து செயற்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர்.

எனவே, காலத்திற்கு ஏற்றவாறு பயன்தரும் இத்தொலைநிலைக் கல்வியை கற்று நேரகாலத்தை பெறுமதிமிக்கதாகக் கழிப்பது ஒவ்வொரு மாணவர் மீதும் கடமையாகும்.



# தற்காலத்தில் கல்வி வரமா? சாபமா?

**M.A.F. ASHFA (SEU/IS/17/IC/186)**
3RD YEAR
FACULTY OF ISLAMIC STUDIES
& ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF
SRI LANKA

இன்று உலகையே ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கும் கொவிட்-19 நோயானது கல்வி, பொருளாதாரம், அரசியல், சமூகம் என அனைத்து துறைகளிலும் பாகுபாடின்றி பல்வேறு தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் மக்கள் வறுமை, கஷ்டம், நோய், மரணம் போன்ற தீய சக்திகளால் ஆட்கொள்ளப்பட்ட வண்ணம் உள்ளனர். அனைத்து துறைகளையும் பாதித்து வரும் இந்நோய்க்கு கல்வி விதிவிலக்கு அல்ல.

கல்வியெனும் போது கற்றல் - கற்பித்தல் என்கின்ற இரண்டும் ஒருசேர அமைய வேண்டும். அப்பொழுதே அது பூரணத்துவம் அடையும். அதுவரைகாலமும் வகுப்பறையில் நேரடியான கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் கொரோனா தொற்றின் பின் ஊரடங்கு, தனிமைப்படுத்தல், ஏனைய தடைகள் காரணமாக கல்வி நடவடிக்கைகளை வழமைக்கு மாறாக நிகழ்நிலை மூலமான தொலைநிலைக் கல்வியை தத்தமது வீட்டிலிருந்தே கற்க-கற்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

முதலில் கற்றல் நிலையை எடுத்துக்கொண்டால் ஆசிரியர்-மாணவர் என்ற நேரடி தொடர்புகளுடன் பாடங்களை கற்றுவந்த போது எவ்வித தடைகளுமின்றி பாடங்களை புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்ததுடன், பாடம் சம்மந்தமான சந்தேகங்களையும் கேட்டு தெரிந்து கொண்டனர். இதனால் ஆசிரியர்களோ அல்லது பெற்றோர்களோ மாணவர்களிடத்தில் கற்றலில் திருப்திநிலை கொண்டிருந்ததுடன் பாரிய அளவிலான பிரச்சினைகளை எதிர்கொள்ளவில்லை. இதனால் மாணவர்களுக்கு தமது அடைவுகளை சரியான முறையில் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. மேலும், பாடங்களில் போதியளவு விளக்கம் பெற்றிருந்ததுடன் பரீட்சையில் சிறந்த புள்ளிகள் பெறக்கூடியவர்களாகவும் இருந்தனர். ஒப்படைகள் (Assignment), பாட முன்வைப்புகள் (presentation) என்பவற்றை புரிந்துகொண்டு செய்யக்கூடியவர்களாகவும் இருந்தனர்.

ஆனால், இந்த தொலைநிலைக் கற்றலில் பல்வேறு பிரச்சினைகளை மாணவர்கள் எதிர்நோக்குகின்றனர். அதாவது இணையத்தொடர்பு மூலம் கற்பதால் கவரேஜ் பிரச்சினை மூலம் சரியான முறையில் பாடங்கள் புரிந்துகொள்ளப்படாமை, பாடங்களில் கவனக்குறைவு, சந்தேகங்கள் காணப்பட்டாலும் அவற்றில் அசட்டுத்தன்மை, அதிக நேரம் தொலைப்பேசி அல்லது கணினி பாவனையால் உடல், உள பாதிப்புக்கள்,

பாடங்களுக்கு உரிய நேரத்திலோ, முழுமையாகவோ கலந்து கொள்ளாமை போன்ற பல காரணங்களால் கற்றலில் கவனம் குறைந்து, ஆர்வம் குறைந்து பின்னடைவு ஏற்படுவதை காண முடிகின்றது.

பாடங்களில் புரிந்துணர்வு ஏற்பட்டு கற்கும் காலஞ்சென்று வரவுக்காக மாத்திரம் பாடங்களுக்கு கலந்துகொள்வதும் வழமையாகியுள்ளது. மேலும் கல்வியின் எதிர்ப்பார்ப்பாக காணப்படுவது சிறந்த பெறுபேறுகளை புள்ளிகளை பெறுவதோடு தமது ஆளுமைகளை, திறமைகளை, புறப்பாடவிதான செயற்பாடுகளை விருத்தி செய்வதாகும். ஆயினும், தொலை நிலைக் கல்வியின் அடைவுகள் பெறுபேறுகளில், புள்ளிகளை பெறுவதில் ஒரு சிலர் அதே உயர் நிலையில் காணப்பட்டாலும் ஏனைய ஒரு சில மாணவர்கள் குறைவாகவே புள்ளிகளை பெறுவதோடு, மற்றைய ஒரு சில மாணவர்கள் கற்றலில் மிகவும் பின்தங்கிய நிலையிலும் காணப்படுகின்றனர். புறப்பாடவிதான செயற்பாடுகள், திறமைகள், ஆளுமைகள் என்பனவும் வெளிக்கொண்டு வரப்படாது முடங்கி காணப்படுகின்றன.

அடுத்து கற்பித்தல் நிலையை எடுத்துக்கொண்டால் நேரடி கற்பித்தலில் ஒரு மாணவன் தனது வாழ்வில்/கற்றலில் முன்னேறிவர ஒரு ஆசிரியர் முழு முயற்சியை எடுக்க முடிகின்றது. மீண்டும் மீண்டும் ஒரே விடயத்தை தெளிவு பெறும் வரை கற்றுக் கொடுக்கவும் முடிவதுடன் அவற்றினை ப்ரெக்டிகல் ரீதியாகவும் செய்து காட்ட முடிவதால் அவற்றினை பார்க்கும் போது மாணவன் மனதில் தானாக பதியப்படுகிறது. எனவே, ஆசிரியர் மாணவர்கள் மேல் வைத்திருக்கும் எதிர்ப்பார்ப்பும் சிறந்த அடைவினை பெறுகின்றது. ஆனால், தொலைநிலைக் கல்வி மூலம் அவ்வாறு சாத்தியமற்றதாகியிருப்பதுடன் பிராக்டிகல் எனும் அம்சமே இன்று தொலை நிலை கல்வி மூலம் பெரும்பாலும் கற்பிக்கப்படுவதில்லை என்றே கூறலாம்.

அந்தவகையில், ஆசிரியர்கள் அல்லது விரிவுரையாளர்களது கற்பித்தலில் மாணவர்களது கற்றலில் எதிர்ப்பார்க்கப்பட்டதோ நேரடி கல்வியில் கிடைக்கப்பெற்ற அடைவுகள் தொலைநிலைக் கல்வி மூலம் எதிர்ப்பார்க்கப்பட்ட விதத்தில் அடையப்பெறவில்லை என்றே கூறலாம். ஆயினும், கால சூழ்நிலைக்கு தொலைநிலைக் கல்வியே பொருத்தமானதாக காணப்படுகிறது.



# யாரைச் சாடுவது...?


FARWIN YOUSUF, 3RD YEAR
FACULTY OF ARTS & CULTURAL
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA


கைப்பிடி சோற்றை
ஈவிரண்டு தட்டுக்கென
பரிமாறுகிறாள்
மாக்சியம் கற்றவளென,

வரவெதிர் பார்த்து
நிற்கும் பிஞ்சுகளுக்கு
இனிப்பூட்டி மகிழும்
வீட்டின் தலைமையாய்

இனாமெனப் பெற்ற
ஏட்டறிவும் இன்று
தொலைத்து நிற்கும்
பால்மனங்களை
அறியாமலில்லை

தம் இயலாமை உணர்ந்து
பெற்ற மனங்களை
சபித்து விடவும்
கூடாதென்ற நப்பாசையன்றி
வேறில்லை...




# தொலைநிலைக் கல்வியும், அதன் அடைவுகளும்

**M.M.M. RISMY (SEU/IS/19/IC/041)**
1ST YEAR
FACULTY OF ISLAMIC STUDIES
& ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF
SRI LANKA

கொவிட் 19 அசாதாரண சூழ்நிலையில் தொலைநிலைக்கல்வியின் எதிர்பார்க்கையும், அடைவுகளும் ஒரு மதிப்பீடு என்ற தலைப்பிலேயே நாம் ஆராயப்போகிறோம். அன்றிலிருந்து இன்று வரை உலகம் இரண்டு வகையான அனர்த்தங்களை எதிர்கொண்டு வருகின்றது. அதில் ஒன்று இயற்கையாக ஏற்படக்கூடிய தாக்கங்கள். இரண்டாவது மனிதனால் ஏற்படக்கூடிய தாக்கங்கள். அந்த வகையில் 2019 ஆம் ஆண்டு முடிவுறுகின்ற போது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு பாரிய பிரச்சினை 2020 ஆம் ஆண்டு அது முழு உலகத்தையுமே கதி கலங்க வைத்து விஸ்வரூபம் எடுத்து மிக மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தி இன்று உலகுக்கே பெரும் அச்சுறுத்தலாக, பல்வேறு துறைகளுக்கும் அது மிக மோசமான அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில் கொவிட் 19 என்று சொல்லக்கூடிய மிக மோசமான நோயின் தாக்கமே பல துறைகளைப் பாதித்தது எனலாம். இந்த கொவிட் 19 முதன் முதலாக 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சீனாவில் உள்ள "வூகான்" மாநிலத்திலேயே ஆரம்பித்தது. இதுவே கொவிட் 19 கொரோனா என்று குறிப்பிடப்பட்டது.

இவ்வாறு ஆரம்பமான இந்த நோயின் தாக்கமானது, 2019 ஆம் ஆண்டு முடிவிலே சீனாவைப் பார்த்து முழு உலகமுமே பரிதாப நிலையை அடைந்து கொண்டிருந்த நேரத்திலே அந்த நாட்டில் அந்நேரத்தில் மூவாயிரத்துக்கு மேலான உயிர்களைக் காவு கொண்டிருந்தது. இதனால் சீனாவின் மீது உலக நாடுகளுக்கு அனுதாபம் ஏற்பட்டது. சீனாவினுடைய பல துறைகள் முடக்கப்பட்டுவிட்டன. சீனாவின் வூகான் மாநிலத்தில் உள்ள ஒரு இறைச்சி விற்பனை அங்காடியிலிருந்து இந்த நோய் ஏற்பட்டதாக ஆரம்பத்திலேயே குறிப்பிடப்பட்டிருந்தது. ஆகவே இதன் பிறப்பிடம் சீனா என்பது நாம் அனைவரும் சந்தேகப்பட முடியாத ஒரு உண்மையாகும்.

இப்படியாக ஏற்பட்ட இந்த நோய் சீனாவுடனேயே முடிந்து விடும் என்று உலகம் நம்பிக்கொண்டிருந்தது. ஏனென்றால், இது சீனாவுக்கு அமெரிக்காவினால் செய்யப்பட்ட சதித்திட்டம் என சில கேள்விகளும் எழுந்து கொண்டிருந்தன. ஆனால், அமெரிக்காவுக்கே சென்று அமெரிக்காவையும் கதி கலங்க வைத்த போதுதான் முழு உலகமுமே ஐயப் பார்வையை நோக்கிச் சென்றது. ஏனென்றால், அமெரிக்காவிலே பல

இலட்சக் கணக்கான மக்களைக் காவு கொண்டது. இவ்வாறு இத்தாலி, ஜேர்மனி போன்ற நாடுகளிலும் தன் ஆட்டத்தை கோரமான விதத்தில் நிகழ்த்திக் கொண்டிருந்தது. இந்த கொவிட் 19 இந்நோயானது சாதாரண பாமரன், படித்தவன் என்று பாராமல் நாட்டினுடைய தலைவர்களையும் தாக்கி மரணப் பயத்தைக் காட்டிச்சென்றது. குறிப்பாக பிரித்தானிய பிரதமர் “வொரிசியன் ஜோனஸன்” இந்த தாக்கத்துக்கு உள்ளாகி மயிர் இழை நிலையில் உயிர்தப்பிய விடயத்தை நாம் அறிவோம்.

இவ்வாறு ஆட்டைக்கடித்து மாட்டைக் கடித்து இறுதியாக நம் கண்டப்பக்கமும் முகத்தைத் திருப்பி தன் கோர ஆட்டத்தை காண்பிக்க தொடர்ந்தது. ஆமாம் நம் அயல் நாடான இந்தியா சுடுகாடாக மாறிய நிலையில் இருந்தது பல இழப்புக்களை சுபீகரித்தும் கொண்டிருந்தது. இவ்வாறு கண்டப்பக்கம் தலையை திருப்பிய கொவிட் 19 எம் நாட்டுப் பக்கம் திரும்புவதற்கு மறக்கவில்லை. 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதியளவில் முழு நாட்டையும் முடக்கக்கூடிய அளவிற்கு தன் ஆட்டத்தை ஆரம்பிக்கத் தொடங்கியது. இன்றுவரைக்கும் அதனது கோர ஆட்டத்தை நாம் கண்களூடாகப் பார்த்து அனுபவித்துக் கொண்டிருக்கின்றறோம்.

எது எப்படியாக இருந்தாலும் முழு உலகமுமே இந்த நோயால் செய்வதறியாது இன்று வரைக்கும் திணர வைத்துக் கொண்டு தன் பாதிப்பை இதுவரைக்கும் நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் ஒரு துறையே கல்வித் துறையாகும். இன்று கல்வித் துறையின் பாதிப்பானது எட்டுத் திசையிலும் குரல்கொடுத்து முழங்கக் காரணம் “இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்” என்ற வாசகமே. தற்போது ஏனைய துறைகளில் இந்நோயினால் ஏற்பட்ட பாதிப்புக்களை வரும் காலங்களில் தீர்க்கலாம் என்ற ஒரு நம்பிக்கையும், தைரியமும் இருந்தாலும் எல்லாவற்றுக்கும் மூலமாக இருக்கக்கூடிய இந்த கல்வி சரியாக இருந்தாலே முடியும் என்பது நாம் எல்லோரும் சிந்திக்கக்கூடிய விடயமாகும்.

அந்த வகையில், இந்த கல்வியானது ஒரு நிலையிலிருந்து மாறி அடுத்த நிலைக்கு தள்ளப்பட்டு காணப்படுகிறது. ஆமாம் நேரடி கல்வி நிலை என்ற நிலையைத் தாண்டி தொலைநிலைக் கல்வி என்ற நிலைக்கு தள்ளப்பட்டு விட்டது. இந்நோயினால் கல்வித்துறையை இக்கால பகுதியில் நோக்குவோமானால் உலகளாவிய ரீதியில் 140 கோடி மாணவர்களினதும், எமது நாட்டிலே காணப்படக்கூடிய 43 இலட்சம் மாணவர்களினதும் கல்விக்கு உலைவைக்கக்கூடிய நிலையில் இந்த கொவிட் 19 ஏற்படுத்தி இருக்கின்றது. இதில் உலக நாடுகளை எடுத்துக் கொண்டால் அபிவிருத்தியடைந்த நாடுகள், தொழினுட்பத்தில் உச்சம் தொட்ட நாடுகள் இன்று கல்வித்துறையிலே கொவிட் 19 இனால் பாதிப்புக்களை கூடியளவிலே எதிர்கொள்ளவில்லை என்று கூறலாம். ஏனென்றால், அவர்களுடைய கல்வி தொழினுட்ப வளர்ச்சியில் அடுத்த கட்டத்துக்கு முன்னேறி விட்டார்கள். பாடசாலையில் தான் சென்று கல்வியை தொடர வேண்டும் என்ற தேவை அவர்களுக்கு இருக்காது. எதுவாக இருந்தாலும் பாடசாலை, பல்கலைக் கழகம் என்பது ஒரு முக்கியமான பீடமே. அவ்வயதில் மிக முக்கியமானதாகும். கைபேசியில் கற்றாலும் சிறிது நேரடியாகச் சென்று கற்பதைப் போன்று வராது. இப்படியான நேரடிக்கற்றலுக்குத்தான் தன் ஆதங்கத்தை செலுத்தி அழிக்க வைத்து ஒன்லைன் எனும் கல்வியை அவ்விடத்தில் அமர்த்தியது. இந்த கொவிட் ஆனது வளர்ந்து வரும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் பாரியளவு பாதிப்பை நிகழ்த்தியது, நிகழ்த்திக் கொண்டிருக்கின்றது. எமது நாட்டைப் பொருத்தவரையில் இந்த ஒன்லைன் கல்வி முறைமை புதிதாக ஆரம்பிக்கப்பட்ட விடயமாகும். அதாவது, கொவிட் 19 இன் தாக்கத்தினால் நாட்டில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகள் ஏனைய பல்கலைக் கழகங்கள், கல்வி பீடங்கள் என்பவை மூடப்பட்டன. இதனால், இலட்சக்கணக்கான பாடசாலை மாணவர்கள் மேலும் பல்கலைக் கழக மாணவர்கள் வீட்டிலேயே முடங்கிக் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. இதனை வெற்றிகொள்வதற்கு நமது நாடு மட்டுமல்ல ஏனைய நாடுகளும் எடுத்த முயற்சியே இந்த ஒன்லைன் கல்வியாகும்.

அந்த வகையில், அப்படியான ஒன்லைன் கல்வியை எடுத்து நோக்குவோமானால் மாணவர்கள் பாடசாலை, பல்கலைக் கழகம் என்பவற்றுக்குச் செல்லாமல் வீட்டிலேயே இருந்து கொண்டு சிறிய கையடக்க தொலைபேசியினுள் தன் கல்வியை தொடரும் நிலையே இந்த ஒன்லைன் கல்வியாகும் என்பது நாம் அறிந்ததே. உலகில் எந்த விடயத்தை நோக்கினாலும் அதற்கு நாணயத்தைப் போன்று இரண்டு முகங்கள் காணப்படும். அதே போன்றே இந்த ஒன்லைன் கல்விக்கும் இரண்டு முகங்களே காணப்படுகின்றது.

அதில் ஒன்று நன்மை மற்றையது தீமை. இப்போது நன்மையின் பக்கம் பார்ப்போமானால், முழு உலகமும் மூடப்பட்ட நிலையில் அறிவுகள் முடக்கப்பட்டு வீட்டிலேயே இருந்த நிலையில் ஒரு மாபெரும் சக்தியாகக் காணப்பட்டது இந்த ஒன்லைன் கல்வியே. ஆமாம் வீட்டிலேயே இருந்து நம் அறிவுப்பசிக்கு தீணி போடும் ஒரு கல்வியே தொலைநிலைக் கல்வியாகும். அடுத்து தீமையின் பக்கம் சாய்ந்தோமானால் இப்படியாக தீமைகள் என்று முழுமையாக குறிப்பிட முடியாது. சவால்கள்ஃதடைகள் என்றே குறிப்பிடலாம். அதைப் பயன்படுத்தும் சாதனத்தினால் ஏற்படும் பிரச்சினைகள், அதைப் பயன்படுத்துபவர்களினால் ஏற்படும் பிரச்சினைகள் என்பவற்றையே தீமையாக குறிப்பிடலாம். அதாவது, பயன்படுத்துபவர்கள் அதை சரியான முறையில் கையாளாத காரணத்தினால் பல தடைகள் இருக்கின்றன. உதாரணமாக, சொல்லப் போனால் இணையம் என்பது, இரண்டு பக்கங்களும் கூர்மையான கத்தி போன்றது. அதைப் பயன்படுத்தும் கையில் தான் தங்கி இருக்கின்றது. அவன் அழிவின் பக்கம் தனது விரல்களை அசைத்தால் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் ஆக்கத்தின்பால் தனது விரல்களை அசைக்கின்றபோது பல நன்மையான விடயங்களை பெற்றுக் கொள்ள முடியும். சவால்களைப் பார்த்தால் அதில் தொலைபேசி, பிரச்சினையும் அடங்கும். அதாவது ஒரு வீட்டில் இரண்டு, மூன்று பிள்ளைகள் காணப்பட்டால் அவர்கள் மூன்று பிள்ளைகளுக்கும் இவ்வசதியை செய்து கொடுக்க வேண்டிய நிலையில் பெற்றோர் தள்ளப்படுகின்றனர். இது எல்லா பெற்றோர்களாலும் இயலுமா என்றால், இயலவே இயலாது. அடுத்தது, நவீன சாதனங்களை இயக்க எல்லோராலும் முடியாது. இதுவும் ஒரு சவாலே.

நாட்டின் கல்வி அடைவுமட்டங்களுக்குக்கூட இது பாரிய தடையாக உள்ளது. காரணம், எமது நாட்டை எடுத்துக்கொண்டால் பரீட்சையில் பருவகாலநிலை தவறி, பருவங்கள் மாறி, பரீட்சை நடாத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இது கல்வியில் ஏற்பட்ட பின்னடைவை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது. இப்படியாக பரீட்சை நடாத்தினாலும் பெறுபேறுகளை பல மாத காலங்கள் கடந்தும் வெளியிட முடியவில்லை என்பது நாட்டின் கொவிட் 19 பிரச்சினையினால் ஏற்பட்ட கல்விப் பின்னடைவையே எடுத்துக் காட்டுகிறது. எனவே, இந்த தொலைநிலைக் கல்வியினால் நாட்டில் அடைவுகள் மேம்படுத்தப்படுகின்றதா என்று பார்த்தால் இல்லை என்று சொல்லக்கூடிய நிலையே காணப்படுகின்றது. இது அமைச்சினாலும் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்றாகவே உள்ளது. முன்னாள் கல்வியமைச்சர் குறிப்பிடுகையில்: கிராமப்புற மாணவர்களில் இத்தொலைநிலைக்கல்வியைப் பயன்படுத்துவோர் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே காணப்படுகின்றனர்.

எவ்வாறு இருந்தாலும் இந்த தொலைநிலைக் கல்வியை தவிர வேறு வழிகளில்லை. எனவே விரும்பியோ, விரும்பாமலோ நாம் இம்முறையை பின்பற்றியாக வேண்டும். இதனை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு நாடளாவிய ரீதியிலும், நமது மன ரீதியிலும் பல முயற்சிகளை எடுக்க வேண்டும். நாடளாவிய ரீதியில் இணைய வசதிகளை ஏற்படுத்துதல், மின்சார செலவுகளை குறைத்தல், தரவு (னுயவய) வசதிகளை குறைந்த செலவில் பெற்றுக் கொடுத்தல் போன்ற முயற்சிகளை மேற்கொண்டால் தொலைநிலைக் கல்வியை வெற்றிகரமாக முகங்கொடுக்கலாம். மனரீதியாக நோக்கும் போது, நமது எல்லை மீறாமல் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு இருந்தால் தான் தொலைநிலைக் கல்வியால் நாமும், நாடும் உரிய அடைவுகளைப் பெற முடியும்.

அலை குளித்து எழுவதால் தான் தங்கம் மின்னுகிறது.

உளி பொழிந்து சிதைப்பதால் தான் சிற்பம் பறக்கிறது.

கடினப்பட்டு உழைப்பதால் தான் உலகம் உயர்கிறது.

எனவே, இக்கல்வியில் ஏற்படும் தடை கற்கள் எல்லாம் வீழ் கற்களாக மாற்றி நாமும் பயனடைந்து எமது நாட்டின் அடைவையும் இவ் அசாதாரண சூழ்நிலையிலும் உயர்த்துவோமாக.




# தோல்விக்குப் பயமும் ஏற்கப்படாமையும்.

**FATHIMA MIHARA MAHIR**
FACULTY OF ISLAMIC STUDIES
& ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF
SRI LANKA

இத்தலைப்பை வாசிக்கும் போது உங்களின் உள்ளத்தில் தோன்றக்கூடிய விடயங்கள் எவை? நான் கூறப்போவது இவ்விரண்டு பண்புகளையும் அல்ல. இவ்விரு பண்புகளுக்கும் உரித்தானவர்கள் பற்றியாகும். அவ்விருவரும் யாராக இருக்கலாம்.??

ஒரு குடும்பம் சமூகத்தில் வெற்றிகரமாக வீரநடை போட இவ்விருபண்புகளும் தெளிவாகவும், உணர்வுபூர்வமாகவும் விளங்கப்படவும், உணரப்படவும் வேண்டியவையாகும். இவ்விரு பண்புகளுக்கும் கொடுக்க வேண்டிய இடத்தைக் கொடுத்தால் நாம் நினைத்த படி சுவாரஷ்யமான ஒரு வாழ்கையை வாழ்ந்து விட்டு மறையலாம். மாறாகஇ இவ்விரு பண்புகளையும் மறுத்து மறந்து வாழ்ந்தால் எந்த மாட மாளிகையாக இருந்தாலும் சரி அந்த வாழ்க்கை நரகமாகத்தான் இருக்கும்.

ஆம், இப்போது இவ்விரு பண்புகளுக்கும் உரித்தானவர்கள் யார்? என்பதைப் பார்ப்போம். தோல்விக்குப் பயப்படும் பண்பைக் கொண்டோர் ஒரு குடும்பத்தில் கணவன் எனும் அந்தஸ்தைப் பெறும் ஆண்கள். அதே போன்று ஏற்கப்படாமை எனும் பண்பைக் கொண்டோர் குடும்பத்தில் மனைவி எனும் அந்தஸ்தைப் பெறும் பெண்கள். ஆண்இ பெண் என்ற இரு படைப்புகளும் அல்லாஹ்வின் அற்புதங்களாகும். இவ்விருவருக்கும் இடையில் அல்லாஹ் பல வேறுபாடுகளை இயல்பாகவே விதியாக்கியுள்ளான்.

“ஆண் பெண்ணைப் போன்றவரல்ல.” (ஆல இம்ரான்: 36) இது இம்ரான்(அலை) அவர்களின் மனைவி தான் ஆண் பிள்ளையை எதிர்பார்த்திருந்த வேளை தனக்கு அல்லாஹ் பெண் பிள்ளையை அருளாக வழங்கிய போது அல்லாஹ் கூறியதாகும். உண்மையில் ஆண் பெண்ணைப் போன்றவரல்ல. பெண்ணும் ஆணைப் போன்றவரல்ல. ஆண்களுக்கும், பெண்களுக்கும் உடல் ரீதியானஇ உள ரீதியானஇ குறியீட்டு ரீதியான பல்வேறு வேறுபாடுகளை அல்லாஹ் அடிப்படையிலேயே நிர்ணயித்துள்ளான். மேற்குறித்த குர்ஆன் வசனத்தின் படி இரு சாராரும் பூரணமானவர்கள் அல்லர். இருவரும் இணையும் போது தான் பூரணமாகிறார்கள்.

இவ்வாறாக இவர்களது மனோதத்துவ ரீதியான வேறுபாடுகள் புரிந்து கொள்ளப்பட வேண்டும். அதிலே தான் முக்கியமான வேறுபாடாக ஆண்களிடம் தோல்விக்குப் பயப்படும் இயல்பு காணப்படுகிறது. பேராசிரியர் வில்டிங் என்பவர் கூறுகிறார் “திருமணங்கள் முறிவடைவதற்கான முதல் காரணம் ஆண்களின் தோல்விக்குப் பயப்படும் இயல்பை (தாம் இரண்டாம் பட்சமாக விரும்பாமையாகும்).” இதனை மனைவியானவள் நன்கு புரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். இது பல்வேறு விதங்களில் பிரச்சனைகளை உண்டு பண்ணக்கூடியது.

உதாரணமாக, கணவன் மனைவியிடம் தனக்கு விருப்பமானவர் யார்? என்று கேட்டால், தனது கணவனுக்கே முதலிடம் கொடுக்க வேண்டும். இல்லையேல் கணவன் அதனை எதிர் மறையாகவே விளங்கிக்கொள்வார். இவ்விடயத்திலிருந்து அவர்களுக்கிடையிலான பிரச்சினைகள் ஆரம்பமாகும்.

ஆகவே, மனைவி தனது கணவனை எந்த விதத்திலும் தாழ்த்தியோ, இரண்டாம் பட்சமாக்கியோ அவரின் பலவீனங்களை சொல்லிக்காட்டிக்கொண்டோ இருக்கக்கூடாது. இது கணவனிடத்தில் பாரிய மனஅழுத்தங்களை உருவாக்கும். அது பெரும் பூகம்பமாக உருவெடுத்து இறுதியில் தலாக்கில் வந்து முடிவடையும்.

ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் ஏற்கப்படாமை என்ற பண்பு இயல்பிலேயே காணப்படுகிறது. பெண்களின் இந்த மனநிலையை ஆண்கள் புரிந்து வைத்திருப்பது அவசியம். ஒரு பெண் தான் வேறு யாராலும் ஏற்கப்படாவிட்டாலும் தனது கணவனால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என எதிர்பார்கின்றாள். மனைவியின் சில குறைபாடுகள் கணவனிடத்தில் வெறுப்பை தூண்டுவனவாக இருக்கலாம். இதனால் மனைவி கணவனால் ஏற்றுக்கொள்ளப்படுவது குறையும். இதனால் மனைவி மனஉளைச்சலுக்கு உள்ளாவாள். இதனால் குடும்பம் பெரியதோர் ஆபத்தை சந்திக்க நேரிடும். இதன் மூலம் மனைவி ஏற்கப்படாமைக்கான காரணங்களை கண்டறிவதோடு அதற்கான தீர்வுகளையும் தேட வேண்டும். ஆனால், ஏற்கப்படாமையே பிரச்சனையாக உருவெடுத்தால் தான் பிரச்சினை உருவாகுமே தவிர வேறு வழியில் உருவாகாது.

மேலும் DR.JOHN GRAY என்பவரின் MEN ARE FROM MARS WOMEN ARE FROM VENUS என்ற புத்தகத்தில் ஆண்கள் செவ்வாய்க்குரியவர்கள், என்றும் பெண்கள் வெள்ளிக்குரியவர்கள் என்றும் கூறியுள்ளார். செவ்வாய் செவ்வாய் தான், வெள்ளி வெள்ளி தான். இவ்விரண்டும் எந்த நிலையிலும் ஒன்றாக மாட்டாது. இந்த இரண்டுமே இரு வேறு உலகங்கள். இதை ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒப்பிட்டு வேற்றுமைக்கு மத்தியிலும் ஒற்றுமையாக வாழ்வதைப் பற்றி அவர் குறிப்பிடுகிறார். பெண்ணின் மூளையை விட ஆணின் மூளை 10% பெரிதாகவும் சிந்தனை வீதம் 6.5% பெண்ணிலும் பார்க்க ஆணுக்கு கூடுதலாகவும் இருக்கிறது. பெண்ணின் இவ்வியல்பை ஆண் புரிந்து கொள்வது கடினமான விடயமல்ல. அதே போன்று பெண்ணானவள் எப்போதும் உபதேசிப்பவளாகவே காணப்படுவாள். ஆனால் ஆணோ தீர்வு சொல்பவனாகவே காணப்படுவான். உபதேசிப்பது மனைவியின் இயல்பு என எண்ணி அதை ஏற்க வேண்டும். அதற்கு மறுப்பு தெரிவிக்கக் கூடாது. அவ்வாறு நிகழும் போது ஏற்கப்படாமை என்ற பண்பு பெண்ணில் தலைதூக்கும். ஆணின் தீர்வுகளுக்கு பெண்ணானவள் கட்டுப்படவும் வேண்டும். இவற்றில் முரண்பாடு ஏற்படும் போது தான் அது மணவிலக்கு வரை செல்ல ஏதுவாகும்.

அதே போன்று பிறரது உணர்ச்சிகளை புரிந்து கொள்வதில் ஆணை விட பெண்ணே முதன்மையானவள். ஆண்களுக்கு பெண்களின் முகப்பாவனைகளை வைத்து விடயங்களை புரிந்து கொள்வது கடினம். இதனை குறித்த பெண் அறிந்திருக்க வேண்டும். இல்லையேல் அவள் ஏற்கப்படாமை என்ற நிலைக்கு உள்ளாகுகிறாள். மேலும் அழுத்தங்கள், பிரச்சினைகளின் போது ஆண்கள் அமைதியை எதிர்பார்ப்பார்கள். ஆனால் பெண்களோ அனைத்தையும் கொட்டிவிட முற்படுவர். அதனை ஆணும் அறிந்திருக்க வேண்டும். பெண்ணும் அறிந்திருக்க வேண்டும்.

இவ்வாறு ஆண்களினதும், பெண்களினதும் வேறுபட்ட விடயங்களை, இயல்புகளை அடுக்கிக் கொண்டே போகலாம். வேறுபட்ட அதாவது ஒவ்வாத இரு பொருட்களுக்கிடையே தான் கவர்ச்சி உண்டென்பது உலக நியதி இதனாலேயே அல்லாஹ் திருமணம் என்ற ஒன்றை ஆணுக்கும், பெண்ணுக்கும் விதியாக்கியுள்ளான். இவ்வாறான வேறுபாடுகள், புரிந்துணர்வுகள் பற்றிய விடயங்களை திருமண பந்தத்திற்குள் நுழைய முன் மணமகனும், மணமகளும் அறிந்து வைத்திருத்தல் தற்காலத்தில் மிகவும் அவசியமாகும். இதன் மூலம் குடும்ளபங்கள் சீரழிவதிலிருந்து பாதுகாக்க முடியுமாவதுடன் குறித்த சமூகம் முன்னேறவும் ஏதுவாக அமையும்.

தற்காலத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற அதிகமான மணவிலக்குகளில் இருந்து எமது சமூகத்தை பாதுகாப்பது முஸ்லிமாக பிறந்த எம் அனைவர் மீதும் கடமை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.



# கொவிட் 19 அசாதாரண சூழ்நிலையில் தொலைநிலைக் கல்வியின் எதிர்பார்க்கைகளும், அடைவுகளும் ஓர் மதிப்பீடு

**RISKA MUBARAK**
3RD YEAR
FACULTY OF ISLAMIC STUDIES
& ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF
SRI LANKA

அண்மைக்காலங்களில் அனைவரது நாவுகளிலும் நொடிக்கொருத்தரம் அளவளாவிக் கொண்டிருக்கும் வார்த்தையாக “கொரோனா அல்லது Covid-19' எனும் வார்த்தை காணப்படுகின்றது என்றால் அது மிகையாகாது. கிட்டத்தட்ட 03 வருடங்களாக உலகை மிரட்டிக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் சுமார் 70 வருடங்களுக்கு முன்னர் அடையாளம் காணப்பட்டிருப்பினும் இவ்வைரஸின் வேறுப்பட்ட வைரஸ்கள் முதன் முதலில் 2003ஆம் ஆண்டு “லாஸ்” நோய் உண்டாக்கும் போது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் ஒட்டகத்திலிருந்து 'MERS' எனும் வைரஸ் மத்தியக் கிழக்கு நாடுகளில் உருவானதாக 2012 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின்னரான காலப்பகுதியில் இன்றைய சூழலில் பெருந்தொற்றாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் Covid-19ஐ உருவாக்கக்கூடிய 'SARS-CoV-2' எனும் வைரஸ் 2019ஆம் ஆண்டு சீனாவில் வுஹானில் 'Live Market' எனப்படும் வியாபாரத்தளத்திலிருந்து மனிதனுக்கு தொற்றியதன் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இக் கொரோனா வைரஸானது பொருளாதாரம்இ கல்வியியல்இ சமூகவியல்இ சுகாதாரவியல் மற்றும் சமய நடவடிக்கைகளிலும் தனது ஆதிக்கத்தினை செலுத்தி உலகின் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இவ்வைரஸின் மூலம் ஏற்பட்ட பாதிப்பு என்னிலடங்காதது. இப்பாதிப்புகளிலிருந்து வெளிவரும் நிலையறியாது பல நாடுகள் திணறிக் கொண்டுடிருக்கின்றன.

இவ்வாறானதொரு திணறலினைத்தான் உலகளாவிய கல்விச் சூழலும் எதிர்நோக்கியுள்ளது. பெருந்தொற்றின் நோயியல் நிலைக்கு அப்பால் அதன் இயங்கு விசையில் அதிகம் பாதிப்புற்ற துறையாக கல்வித் துறை காணப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் பொரும்பாலான பாடசாலைகள்இ கல்விசார்ந்த நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. கடந்த வருட ஆரம்ப காலப்பகுதியில் மட்டும் (மார்ச் தொடக்கம் ஜூன் வரை) நான்கு மாதங்கள் 480 மணித்தியாலங்கள் கற்பித்தல் இல்லாமற் போனது. (இராசேந்திரம்இநா.2020)

“ஏப்ரில் மாதம் முதல் உலகம் முழுவதும் 1,500,000,000 க்கும் மேற்பட்ட ஆரம்ப நிலை முதல் மூன்றாம் நிலை வரையான பள்ளிக்கு வரமுடியாத மாணவர்கள் காணப்பட்டுள்ளனர்”. (UNESCO, 2020) எனக் குறிப்பிடப்படுகிறது. அத்தோடு ஐ.நா சபையானதுஇ “கொரேனா வைரஸ் பாதிப்பால் சுமார் 160க்கும் மேற்பட்ட நாடுகளில் கல்வி நிலையங்கள் மூடப்பட்டுள்ளது” எனக்குறிப்பிடுகின்றது. மேற்கூறப்பட்டுள்ள மேற்கோள்கள் கல்வியல் சார் பாதிப்புகளை துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றது எனலாம்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் பெருந்தொற்றின் சவால்களுக்கு ஈடுகொடுக்கும் வகையிலும், கல்வியியல் துறையினை மேம்படுத்தும் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டும் அமைந்த இணையவழிக் கற்றல் மற்றும் தொலைநிலைக் கல்வி என்பவற்றினை இவ் இடர் காலக்கட்டத்திற்கு பொருத்தமான கல்வி முறையாக ஐக்கிய நாடுகளில் கல்வி விஞ்ஞான கலாச்சார அமைப்பு (UNESCO) முன் மொழிந்துள்ளது.

இத் தொலைநிலைக் கற்பித்தல் முறையினுடாக பாடங்கள் Whats App, Viber, Zoom, Google Meet, போன்றவற்றினுடாக பல்லூடக வசதிகளுடன் கற்பிக்கப்படுகின்றன. தேவையான இடங்களில் பேச்சுரைகள்இ செயன்முறை விளக்கங்கள்இ புகைப்படங்கள்இ அசைவுப்படக் காட்சிகள்இ யூடியூப் தளம்இ வீடியோ பயிற்சிகள்இ கற்றலிற்கு தேவைப்படும் பாடம் அல்லாத மற்ற பயில்வுத் துணைக் கருவிகள் மற்றும் மெய்நிகர் வகுப்புகள் இதற்காக பயன்படுத்தப்படுகின்றன.

பல நவீன அடையாளங்களுடன் வளர்ந்துள்ள தொலைநிலைக் கல்வியானது ஊரடங்குகளாலும், பயணத்தடைகளாலும் பாதிப்படைந்துள்ள கல்விச் செயற்பாடுகளுக்கு தீர்வாக அமைந்துள்ளது எனலாம். இதன் மூலம் இருக்கும் இடத்திலிருந்தே சௌகரியமான நேரங்களில், சௌகரியமான முறையில் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடல்இ கல்வியை தொடர்த்தேர்ச்சியாக பேணுதல்இ உரிய காலத்தில் கல்வீ செயற்பாடுகளை முன்னெடுத்தல்இ கற்றல் சார் இணையவழித் தொழில்நுட்ப திறனை வளர்த்துக் கொள்ளல்இ வெவ்வேறு கல்வி நிருவனங்களின் வாயிலாக ஒரே நேரத்தில் பல்வேறு துறைகளில் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடல் என்பவற்றோடு “வெர்சுவல் கிளாஸ் ரூம்“ வசதிகள் மூலம் நேரடி வகுப்பறை அனுபவத்தை தருதல்இ மாணவர்கள் ழுடெiநெ இல் தங்களுக்கு விவாதிக்கவும், ஐயங்களைக் போக்கிக் கொள்ளவும் இயலுமாயிருத்தல் போன்ற நன்மைகளை மாணவர்கள் பெறுகின்றனர்.

மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் கற்றல்-கற்பித்தல் செயன்முறைகளை வெகுவாக இலகுப்படுத்தியுள்ள தொலை நிலைக் கல்வீ முறையானது அதிகமான நாடுகளில் குறிப்பாக இலங்கைப் போன்ற நாடுகளில் அதிக அனுபவமற்ற புதிய முறையொன்றாகவே காணப்படுகின்றதன் காரணமாக இதனைப் பயன்படுத்துவதில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இரு தரப்பினர் மத்தியிலும் தடுமாற்றங்கள் நிறையவே காணப்படுகின்றன. இப் புதிய முறையினூடாக கல்வி அனைத்து மாணவர்கள் மத்தியிலும் சென்றடைவதிலும் பல சிக்கல்களும், தடைகளும் காணப்படுகின்றன.

குறிப்பாக மாணவர்கள் மத்தியில் காணப்படும் பொருளாதார நிலை தொலைநிலைக் கல்வியில் பெரிதும் தாக்கம் செலுத்துகின்றது. கல்வியினை தொடர்வதற்கு சாதனங்களை பெறமுடியாத நிலையில் பல மாணவர்கள் உள்ளனர். விரைவான இணையத்தை அணுகி கற்பதற்கான Covarage இன்மையும் தொலைநிலைக் கல்விற்கு தடையாக உள்ளது. அத்தோடு இடவசதி பற்றாக்குறை, முழுமையாக பாடம் தொடர்பான சந்தேகங்கள் தீர்க்கப்படாமை, தொழிநுட்ப பற்றாக்குறை, உடல், உள உபாதைகளுக்கு உட்படல், வகுப்பறை போன்ற அமைதியான சூழலின்மை போன்றன மாணவர்களின் தடங்களற்ற சீரான கற்றல் நடவடிக்கைகளுக்கு தடையாக உள்ளன.

பலவசதிகளுடன் கூடிய தொலைநிலைக் கல்வி முறையானது வகுப்பறை கற்றல் நடவடிக்கைகளுக்கு சமமான முறையில் மாணவர்களது திறன்களை வளர்க்கின்றதா? என்பது ஐயப்பாடு மிகுந்தது. மாணவர்கள் ஆசிரியர்களுடன் நேரடியான கற்றலின் ஈடுபடும் போதும் கற்றலுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பாடசாலை மற்றும் கற்றல் சூழலும் ஒரு மாணவனது ஒழுக்கம்இ சிந்தனைஇ நற்பண்புகள் மற்றும் சுயதிறன் விருத்தி என்பவற்றில் ஏற்படுத்தும் மேம்பாட்டினை தொலைநிலைக் கல்வியால் பெற முடியுமா? என்பது கேள்விக்குறி நிறைந்தது. கல்வியானது சிறந்த நற்பிரஜையை உருவாக்குமெனில் இணையவழிக் கல்வியானது அவ்வுருவாக்கத்தினைத் தரும் என்பது சாத்தியமானதொன்றல்ல.

இவ் இடர் காலத்தில் மாற்றீடான தொலைநிலைக் கல்வி தொடர்தேர்ச்சியாக கல்வியைப் பெருவதில் தனது பங்களிப்பை முழுமையாக வழங்க முடியுமாக இருப்பினும் பூரணத்துவமான கல்வியினை மாணவர்களுக்கு வழங்குவதில் முழுமையான பங்களிப்பினை வழங்க முடியாத நிலையிலேயே உள்ளது என்பதனை இந்நவீனக் கல்வி முறையினது பாதகங்களை அவதானிக்கையில் தெளிவாக புரிந்துக்கொள்ளலாம். எதிர்க்காலங்களில் நேரடி கற்றல் நடவடிக்கையுடன் இணைந்தாக தொலைநிலைக் கல்வி முறை காணப்படுமாயின் வினைத்திறனான கல்விக்கான முழுமையான பங்களிப்பினை தொலைநிலைக் கல்வியினால் பூரணமாக வழங்கமுடியுமாக இருக்கும்.



# கொவிட் 19 அசாதாரண சூழ்நிலையில் தொலைநிலைக் கல்வியின் எதிர்பார்க்கைகளும், அடைவுகளும் ஓர் மதிப்பீடு


A.W. FATHIMA NADHA (SEU/IS/19/IC/243)
1ST YEAR
FACULTY OF ISLAMIC STUDIES
& ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF
SRI LANKA


கோவிட்-19 ஆனது உலகளாவிய ரீதியில் பொருளாதாரம் , சுகாதாரம் , கல்வி என எல்லாத்துறைகளிலும் பாரியளவான தாக்கத்தை செலுத்தியுள்ளதை கண்கூடாக காணலாம். முக்கியமாக கல்வித்துறையில் இது ஏற்படுத்திய தாக்கங்கள் அனைவரதும் பேசுபொருளாக மாறியுள்ளது. கல்விக்கூடங்கள் தற்காலிகமாக மூடப்பட்டதால் அண்ணளவாக 290 மில்லியன் மாணவர்கள் கல்வியை இழந்த நிலையில் இருந்ததாக யுனெஸ்கோ அறிக்கை வெளியிட்டது.

பள்ளிக்கூட கற்கை இடைநிறுத்தப்பட்ட நிலையில் மாணவர்கள் , ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் என அனைவரும் அதிகளவில் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக மாணவர் மத்தியில் கல்விக்கான ஆர்வம் குன்றிச்சென்றது. வீடுகளிலே முடங்கிய மிக மூர்க்கத்தனமான மாணவ சமூகம் உருவாகியது மட்டுமல்லாமல் மன அழுத்தத்துக்கும் அவர்கள் ஆளாகினர். எனவே இவற்றுக்கான உடனடித் தீர்வாக யுனெஸ்கோ நிறுவனம் தொலைநிலை கல்வியை அறிமுகம் செய்தது.

பாடசாலையை பொறுத்த வரையில் அது சமூக தொடர்புகளாலும் உடலியல் செயற்பாடுகளாலும் பிண்ணிப் பிணைந்த ஒன்று. இதனை இழந்த துர்பாக்கியவான்களாக இன்றைய சமூகம் விளங்ககூடாது என்ற நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்டதே இத் தொலைநிலை கல்வியாகும். இவ்வாறு நடைமுறைக்கு வந்த தொலைநிலை கற்கை உருவாக்கப்பட்ட நோக்கம் சரியாக நிறைவேற்றப்பட்டதா இல்லையா என்பது பெரும் கேள்வியாக உள்ளது.

பொதுவாகவே எதிர்பார்க்கை அடிப்படையில் கல்விசெயற்பாடுகளானது எந்தவித தங்குதடையும் இன்றி இலத்திரனியல் உலகின் உதவியோடு மாணவச்செல்வங்களை வந்தடைந்து கொண்டு இருக்கிறது எனலாம். அத்தோடு விரும்பியோ விரும்பாமலோ கல்வித்துறையுடன் தொடர்புடைய அனைவரும் நவீன தொழினுட்பத்துக்கு பழக்கப்படுத்தபட்டனர். நீண்ட நேர வகுப்புகளால் மாணவர்கள் சோர்வடைய கூடாது என யுனெஸ்கோ நிறுவனம் மாணவர்களுக்கான அதிகபட்ச நேரடி ஒலிபரப்பு வகுப்புகளுக்கு உரிய நேர அளவை வகுத்தது. அதனடிப்படையில் ஆரம்பப்பிரிவுக்கு இருபது நிமிடங்களும் இடைநிலை பிரிவுக்கு நாற்பது நிமிடங்களுமாக நேரம் வரையறுக்கப்பட்டது. அது அவர்களது கல்வி சுமையை குறைத்தது எனலாம். மேலும் குறுகிய நேரத்தில் தகவல்கள் சென்றடையும் என எதிர்பார்க்கப்பட்டதும் சாதகமாகவே முடிந்தது. சாதாரண வகுப்பறை கற்கையை விட 40% - 60% வரை மிகக்குறுகிய நேரத்தில் மாணவர்கள் தகவல்களை உள்ளீர்கின்றனர்.

மேலும் எதிர்பார்க்கைக்கு ஏற்பவே இம்முறையானது மாணவர்களிடம் வரவேற்கத்தக்க கல்வி முறையாகவே காணப்படுகிறது. தமக்கே உரிய முறையில் தமது சூழலில் அவர்களது புலன்களை பயன்படுத்தியே மிகவும் ஆர்வமாக விரும்பியதை ஏற்று விரும்பாததை தவிர்த்து அழகியதோர் கல்வி சூழலை பிள்ளைகள் உருவாக்கி கொண்டிருக்கின்றனர் எனலாம். எனவே உடல் சார்ந்த செயற்பாடுகள் தொலைநிலை கல்வியூடாக தடைப்பட்டாலும் கூட ஏதோ ஓர் விதமான சுவாரஷ்யமான முறையாக இம்முறை விளங்குகிறது என்று கூற முடியும்.

எவ்வாறுதான் நேர்மறையான விடயங்கள் பற்றி கதைத்தாலும் கூட நாணயம் இரு பக்கங்களை கொண்டிருப்பது போல் எதிர்மறையான விடயங்களும் இல்லாமலில்லை. எதிர்பார்க்கைக்கு எதிர் திசையில் சில தாக்கங்களும் இடம்பெற்று வருகின்றன. முக்கியமாக, இத்தொலைநிலை கற்கை தங்கியிருப்பது நவீன ஊடகங்களிலும் தொழிநுட்பத்திலும் ஆகும். உலகளவில் எல்லா மாணவர்களும் ஏதாவதொரு டிஜிட்டல் சாதனம் வைத்திருந்தால் மட்டுமே வெற்றிகரமாக இக்கல்வி முறையில் பயனடையலாம். சுவிட்சர்லாந்து , நோர்வே , ஆஸ்திரியா முதலிய நாடுகளில் 95% ஆன மாணவர்கள் இவ்வகையான டிஜிட்டல் சாதனங்களை கையிருப்பில் வைத்திருக்கின்ற நிலையில் இந்தோனேசியா போன்ற நாடுகளில் 34% ஆனோரே பயன்படுத்துகின்றனர். எனவே இம்முறை மூலம் எல்லா வகையான மாணவர்களும் பயனடைகின்றனர் என கூற முடியாது.

இன்னும் 15 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் அதிகமாக கையடக்க தொலைபேசி பாவனையில் மூழ்கி வேறுவிதமான எதிர்பாரா விளைவுகளை ஏற்படுத்தி கொள்கின்றனர். மேலும் கண் சம்பந்தப்பட்ட நோய்கள் மாணவர் மத்தியில் அதிகமாக உருவாகி வருவதாக இலங்கை வைத்தியர் சங்கம் தெரிவித்து உள்ளது. ஆகவே உடலியல் ரீதியான சீர்கேடுகளை மாணவர்களிடத்தில் தொலைநிலை கற்கை புதிதாக ஏற்படுத்தி இருக்கிறதை உறுதியாக கூற முடியும்.

இவ்வாறு நிகழ்நிலை பரீட்சைகளில் மோசடி , உளரீதியான தாக்கங்கள் என பல்வேறு பாதகமான விளைவுகளையும் எதிர்பாரா விதமாக ஏற்படுத்தி உள்ளது. என்றாலும் கூட மாணவர்களை கல்வியோடு இணைத்து பலவிதமான பிரயோசனங்களை அழிக்கவள்ளதாக விளங்கும் தொலை நிலை கற்கையை கொண்டு அதிக பிரயோசனங்களை பெற்றுக்கொள்ள மாணவ சமூதாயம் எத்தனிக்க வேண்டும். கோவிட் 19 அசாதாரண சூழ்நிலையில் தொலைநிலை கல்வி எதிர்பார்க்கைக்கு முரணான பாதக விளைவுகள் ஒரு சிலதை ஏற்படுத்தி இருந்தாலும் சேற்றிலே கிடந்தாலும் மாணிக்கம் , மாணிக்கம் தான் என்பது போல் பாதகமான சூழலிலும் சிறந்தவர்களாக மாணவ சமூதாயம் செயல்பட வேண்டும் என்பதே முடிவாய் அமைகிறது.



# கொவிட் 19 அசாதாரண சூழ்நிலையில் தொலைநிலைக் கல்வியின் எதிர்பார்க்கைகளும், அடைவுகளும் ஓர் மதிப்பீடு


**MUHAMMATHU HANIFFA FATHIMA ROSHANI**

1ST YEAR

FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE

SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA


கொவிட் 19 பெருந்தொற்று என்பது தீநுண்மி காரணமாக ஏற்படும் கொரோனா வைரஸ் நோயின் பெரும் தொற்றாகும்.இத்தொற்று நோய் முதலில் சீனாவில் உள்ள வூகான் நகரில் 2019 டிசம்பரில் அடையாளம் காணப்பட்டது.ஜனவரி 30 அன்று கொவிட் 19 தொற்றை உலக அவசரநிலையாகவும், மார்ச் 11 அன்று ஒரு பெரும் தொற்றாகவும் உலக சுகாதார அமைப்பு அறிவித்தது.அன்றிலிருந்து பல நோயாளர்கள் பாதிக்கப்பட்டும், சிலர் இறந்தும், மேலும் சில மீண்டு வந்துள்ளனர்.

இவ்வாறு உலகை உலுக்கி கொண்டிருக்கும் கொவிட் 19 அசாதாரண சூழ்நிலையில் கல்வி, வணிகம்,பெரும் தொழில் முறை செயற்பாடுகள் அனைத்தும் இணைய வழி மூலமே நிகழ்கின்றன.அந்தவகையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் ஒரு ஜனநாயக நாட்டின் பிரதான தேவையும் பொறுப்புமாக காணப்படுகின்றது. எனவே கல்வி சார் செயற்பாடுகளை தொலைநிலைக் கல்வி மூலம் செயற்படுத்த உலகமே முன்னிற்கிறது.அதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல.

தொலைநிலை கல்வியை தொடர்வதற்கு அடிப்படை தேவையாக அறிதிறன் பேசிகள் (Smart Phones), மடிக்கணினி ( Laptop) கணினி (Computer) முதலிய தொழில்நுட்ப கருவிகள் தேவைப்படுகின்றன. பாடசாலை, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கு பல வசதிகளோடு தொலைநிலைக் கல்வியில் கற்பிக்கப்படுகின்றன அதற்கு Webinars, Google Meet,Zoom, Teamlink முதலான செய்திகள் அறிமுகமாயின. இவ்வாறான வசதி வாய்ப்புகள் அனைத்து மாணவர்களிடமும் காணப்படுகிறா என கேள்வி எழுப்பும் போது 70 வீதமான மாணவர்களிடம் முழுமையான தொலை நிலைக் கல்வி வசதி இல்லை என்பது புலனாகிறது. (தென்கிழக்கு பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் முதலாம் வருட மாணவர்களை மையப்படுத்தும் போது)

ஒரு செயற்பாட்டை நிகழ்த்தும் போது அதற்கான தூரநோக்கும்,எதிர்ப்பாக்கைகளும் அதிகம் காணப்படுகின்றன.அந்தவகையில் தொலைநிலை கல்வி மூலம் பாலர் முதல் பல்கலைக்கழக மாணவர் வரை கல்விச் செயற்பாடுகளை தொடர வேண்டும்.ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் சிறந்த முறையில் தொலை நிலைக் கல்வி முறையை திட்டமிட்டு வழிநடத்த வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.எனவே கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் எந்த ஒரு இடைவெளியும் இன்றி நகர வேண்டும் என்பது மற்றுமொரு எதிர்பார்க்கையாகும்.அதே போன்று மாணவர்களும் இவ் அசாதாரண சூழ்நிலையில் தொலைநிலைக் கல்வி அவசியம் என்பதில் 80 வீதம் விழிப்பாக இருக்கின்றனர்.இக் கல்வி முறை பல சாதகங்களையும், பாதகங்களையும் கொண்டுள்ளன.

பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்கு சென்று கற்கின்ற நேரங்கள் மீதப்படுத்தப்படுகிறது. எனவே மாணவர்கள் சாதாரண நாட்களை விட இந்த அசாதாரண சூழ்நிலை நாட்களில் கற்கைகளுக்காக செலவு செய்யும் நேரங்கள் அதிகரிக்கின்றன. எங்கும் செல்லாமல் வீட்டில் இருந்தவாறு எந்தக் கல்வியையும் கற்கின்ற சூழல் உருவாகி உள்ளது. எனவே பல்கலைக்கழகங்களில் பல்வேறு காரணங்களுக்காக கற்கையை பிற்படுத்திய (Postponed) மாணவர்களில் அதிகமானோர் கற்கையை தொடர்ந்து உள்ளமை குறிப்பிடத்தக்கது. நம் வீட்டில் இருந்தவாறே வெளிநாடுகளில் நடக்கின்றன Webinar களில் கலந்து சிறப்பிக்க வாய்ப்பு வசதிகளை தொலைநிலை கல்வி மாணவர் சமுதாயத்திற்கு வழங்கியுள்ளது. நாம் காணாத, கற்றே இருக்காத பல சிறந்த கல்விமான்கள் இடம் கற்கக் கூடிய சிறந்த சந்தர்ப்பத்தை தொலைநிலைக் கல்வி மூலம் பெறக் கூடியதாக இருக்கிறது.

தொலைநிலைக் கல்வி மாணவர்களுக்கு மத்தியில் வித்தியாசமான அனுபவங்களை கொடுக்கிறது. பாடசாலைக்கோ, பல்கலைக்கழகங்களுக்கோ சென்று கற்காமல் வீட்டில் கணினி திரைக்கு முன்னே தம் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வது புதிய விடையம் ஆகும். எனவே மாணவர் சமுதாயம் அந்த இலத்திரணியல் திரைக்கு தம்மை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். என்றாலும் டிஜிட்டல் திரைக்கு முன்னால் மாணவர்கள் அதிக நேரம் இருப்பதை அலைக்கழிப்பு செய்கின்றனர். ஒரு மணித்தியாலம் இலத்திரணியல் திரைக்கு முன்னால் 48.2மூ மாணவர்கள் இருக்க விரும்புகின்றனர். எனவே 45 நிமிடங்கள் ஒரு பாட வேளைக்கு பொருத்தமாக கருதப்படும். நேரங்கள் அதிகரிக்கும் போது மாணவர்களின் ஈடுபாடு குறைந்து கொண்டு செல்வதை காணக் கூடியதாக இருக்கிறது.

தொலைநிலை கல்வியில் பல்வேறு சாதகங்கள் காணப்பட்டாலும் பல்வேறு பாதகங்களும் காணப்படுகின்றன. அந்தவகையில் உடலியல் ரீதியாக மாணவர்கள் 90 மூ ஆனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். அதிக நேரம் கணினி, கைத்தொலைபேசி பயன்படுத்துவதால் மாணவர்களின் மூளை வளர்ச்சித் திறன் பாதிக்கும் அபாயம் உள்ளது. இதன் மூலம் கவனச் சிதரல், தூக்கமின்மை, படைப்பாற்றல் குறைவு, கற்பனைத் திறன் குறைவு ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது.

தொலைநிலை கல்வியின் மிகப் பிரதான விடயமாக இணைய சாதனக் கருவிகளாக காணப்பட்டாலும் இணைய வசதிகள் இலங்கையில் அனைத்து பகுதிகளிலும் சரியாக கிடைக்காமல் இருக்கிறது. கவரேஜ் பிரச்சினைகள் மாணவர்களை மட்டுமன்றி ஆசிரியர்களுக்கும் பிரச்சினையாக காணப்படுகிறது.எனவே சிக்கலான நிலைமையில் பல மாணவர்கள் மன ரீதியாக பல தாக்கங்களுக்கு ஆளாகின்றனர். பரீட்சை, பாடங்கள் மீது அவநம்பிக்கை கொள்கின்றனர். சுய திறன்களை இழக்கும் சம்பவம் காணப்படுகிறது. என்றாலும் தொலைநிலை கல்வியை சீராக்கும் வேறு ஆலோசனைகளை முன்வைக்க முடியும்.

1. மாணவர்களுக்கு தொலைநிலை கல்வியை உற்சாகமூட்டும் நிகழ்வுகளை வழங்குதல் இலத்திரனியல் கணினி தொலைபேசி இல்லாத மாணவர்களுக்கு சுகாதார ஆரோக்கியம் பேணி குழு முறையாக கற்றல்.

2. அரசாங்கத்தால் தீர்மானித்து வழங்கி வரும் தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்களை பார்த்தல்.

பல்வேறு எதிர்பார்ப்புகளும் நோக்கங்களும் தீட்டப்பட்டாலும் பிரச்சினைகள் தாக்கங்கள் ஏற்படாமல் இருக்காது என்றாலும் முதலில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற அவர்கள் புத்துணர்ச்சி புதிய வழிமுறைகளை கையாண்டு தொலைநிலை கல்வியை சிறந்த முறையில் அழகியதிட்டமிடல்லுடன் கொண்டு வர வேண்டும் என்பதே எனது மதிப்பீடு ஆகும்.



# தொலை நிலைக் கல்வியின் இன்றைய நிலை...!

**FASEEHA UNAIS**
1ST YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

நீளவளைவில் நில்லாமல் நகரும் நதியில் நெட்டையான கம்பத்தோடு நெலிந்து செல்லும் படகில் கம்பத்தோடு பறந்த கொடியை கொடிய புயலொன்று திடீரென தாக்கி சாந்தமான நிலையை வீழ்த்திச்சென்ற வானிலைக்கு மாற்றமாய் அழகான புவிவாழ்வை அழுத்தமாக அடக்கி விட்ட கொரோனா இன்று அகலாத சூறாவளியாய் திகழ்கிறது!

கிரீடம் போன்ற உருக்கொண்ட கொரோனா இன்று உலக நாடுகளையெல்லாம் ஆட்படுத்தி முடிசூடா மன்னனாக வலம் வருகிறது!.இதைக்கட்டுப்படுத்த "சுத்தம் சுகம் தரும்" என்ற பழமொழியில் தொடங்கி "தள்ளியிரு! வாய்மூடியிரு!வீட்டில் அடங்கியிரு! குழியில் அடங்காமலிருப்பாய்!" என்ற புதுமொழி வரை நீண்டு விட்டது! இதனால் கல்வி,பொருளாதாரம்,சமூக வளர்ச்சி என யாவும் கொழுகொம்பின்றிய கொடியாய் தவிக்கும் நிலைக்குள்ளாக்கியுள்ளது!.

இதை சீர்செய்ய இன்றைய தொழில்நுட்பம் வழிவகை செய்துள்ளது எனலாம். அதாவது மக்கள் ஓரிடத்தில் ஒன்று கூடினால் தான் நோய் பரவும் அபாயம் ஏற்படும், அதுவே அவர்களை வீட்டிலிருந்தவாறே ஒன்றிணைத்தல். இது தான் தொழில்நுட்ப சூத்திரம். இதன் மூலமாகத்தான் தொலை நிலைக்கல்வியும் உருவாக்கம் பெற்றது.

தொலை நிலைக் கல்வியானதும் 19ம் நூற்றாண்டிலேயே தோற்றம் பெற்றாலும் இக்காலப்பகுதியிலே செல்வாக்குப் பெற்றது என்றால் மிகையாகாது!. இக்காலம் கல்வித்துறை எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளது முன்னேற வேண்டும் என்பதை இக்காலம் உணர்த்தியுள்ளது! இதைத்தான் இந்தியாவைச் சேர்ந்த சமூக ஆர்வலரும் கல்வியலாளருமான அனுராதா என்பவர் பிபிசி செய்தி ஊடகத்திற்கு தகவல் தெரிவிக்கும் போது "இந்த வைரஸ் தற்போது இருக்கும் கல்வி கொள்கைகள் குறித்து மறுகட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதையும், உலகெங்கிலும் உள்ள கல்வியலாளர்களுக்கு இதைப்பற்றி சிந்திக்க வைத்துமுள்ளது!" என்று கூறுகிறார்! இந்த தொலை நிலைக்கல்வி பாடவிதான பூரணம்,காலவோட்டத்திற்கேற்ப தங்கு தடையின்றிய கல்வி நடவடிக்கை என அனுகூலத்தை அளித்தாலும் இது எவ்வளவு தூரம் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது கவனிக்கத் தக்கவொன்றாகும்.

உண்மையில் தொலை நிலைக்கல்வியின் அடைவுகள் என்பது எதிர்பார்க்கையிலும் பார்க்க குறைந்ததாகும். 2016 இல் நடந்த கணக்கெடுப்பின் படி இலங்கை வளர்ந்துவரும் நாடு என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது!இங்கு வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மக்களே அதிகம். இந்த சனத்தொகையில் 350,000 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள்! இவர்கள் அனைவருக்கும் தொலை நிலைக்கல்வி சாத்தியமா என்பதை நோக்கினால் கேள்விக்குறியே விடையாகும். தொலைத்தொடர்பு சாதனம், இணைய வசதி என யாவும் மிக மிக குறைவு என்பதே நிதர்சனம்! இந்த நிலையில் பணம் படைத்தவர்கள்களுக்கு மட்டுமே கல்வி. பணம் இல்லாதவர்களுக்கு இல்லை என்பது ஜாதி வேறுபாடு போல கோயிலுக்குள் சாமி தெருக்கோடிக்குள் வராது என்ற நிலைமை ஆகிவிட்டது! அதே நேரம் இணைய தொடர்பை வழங்கும் சமிக்ஞைத் தூண்களும் இலங்கையை பொறுத்தவரையில் குறைவாகவே உள்ளது. இதனால் கிராமப்புர இடங்களில் குறைவான நிலையிலே கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படிகினறன. மேலும் தொலைநிலைக்கல்வியை கற்கை நெறியினூடாக தொடர்ந்தாலும் அது வெறும் பொம்மைக்குள் பஞ்சு நிரப்பும் செயற்பாடு போன்றதாகும். பாடவிதானத்தையே மூளையில் நிரப்ப முடியுமே தவிர அதனால் எதிர்பார்க்கப்படும் உயிரோட்டம் கானல் நீர்தான்! ஆசிரியர் வகுப்பில் பாடமெடுக்கும்போது ஒழுக்கம், எதிர்கால சிந்தனை என யாவும் ஒன்றினைந்து மாணவனை எதிர்கால தலைவனாக்கும். ஆனால் இதன் மூலம் வெறும் பூச்சியமே உருவாகும். இந்நிலையில் வகுப்பில் சக மாணவனோடு உறவாடி பழகும்போது சமூகத்தை எதிர்க்கொள்ளும் மனோதைரியம் வளரும். ஆனால் அது இங்கு தடைப்படுகிறது! மேலும் மாணவர்களுக்கு வெறும் ஏட்டில் நிரப்பிய சொற்களே வந்து சேரும். அதன் யதார்த்தம் வந்தடையாது! அதே நேரம் எமது நாட்டைபொறுத்த வரையில் சாதன வசதிகள் பற்றிய அறிவு மிகவும் பற்றாக்குறையாகவே உள்ளது! இதனால் பெற்றோர் கவனிப்பாரற்ற நிலையில் சாதனங்களை பாவிக்கும் பிள்ளைகள் வழி தவறுகின்றனர். இதனால் சமூக சீர்கேடுகள் ஏற்படுகின்றது!

தொலை நிலைக்கல்வியின் மூலம் சிறந்ததொரு நிலையை அடையலாம் என்ற நிலை பொய்ப்பட்டதே மெய்யாகும்! அறுசுவை உணவை எதிர்பார்த்து ஒருசுவையுமின்றிய சாப்பாடு கிடைத்தது போல ஆகிவிட்டது தொலை நிலைக்கல்வியின் நிலை!

# நவீனம் செதுக்கிய சிற்பம்

இலவசக் கல்வி இடைநடுவில்
தடம்புரளாமல் பயணிக்க
தொடர்கிறது தொலைநிலைக் கல்வி
கொரோனாவில் தட்டவிழ்ந்து
வீண் விளையாட்டில் அலை மோதி
வீணாக காலத்தை ஓட்டும்
இளைய சமூகத்தை அறிவூட்ட
தொடர்கிறது இணையவழிக்ககல்வி
ஊர்ரெங்கும் முடங்கியுள்ள சமூகத்தை
உத்தமர்களாய் பாரில் பரிணமிக்க
வீட்டுக்குள் நுழைந்து அறிவின் பால்
இணைக்கிறது தொலைநிலைக் கல்வி
தொழிநுட்ப உச்ச கட்ட யுகத்தில்
மாணவ சமூகத்தின் எழுச்சியில்
தொழிநுட்ப வளர்ச்சியால்
கல்வி சீரமைகிறது தொலைநிலையில்
நவீன தொழிநுட்ப யுகத்தில்
பல தடைகற்கள் எதிரில் நிற்க
அத்தடைகற்களை படிகற்களாய் மாற்றி
வீர நடைபோடுகிறது கல்வியுகம்
எல்லையில்லா கல்வி என்றும்
தடையில்லாமல் தன் பயணம் தொடர
நவீன யுகம் செதுக்கிய சிற்பமே
தொலைநிலைக் கல்வி



M.M.M. RAMZEEN, 1ST YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA



# தொலைநிலைக் கல்வி ஓர் வரப்பிரசாதம்

**M.A.F. ANEEKA (SEU/IS/19/IC/018)**
1ST YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

தற்போது நாட்டில் காணப்படும் கொரோனா வைரஸ் தொற்றின் பரவல் காரணமாக அனைத்துத் துறைகளும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றன.அதேநேரம் தொடர்ந்து அத்துறைகளை முன்னெடுத்துச் செல்வதில் பல்வேறு சிரமங்களும் ஏற்பட்டுள்ளன. அந்த வகையில் அத்துறைகளில் ஒன்றாக கல்வித் துறையையும் குறிப்பிட முடியும். எனவே இவ்வாறான அசாதாரண சூழ்நிலையில் கல்வித் துறையில் தொலைநிலைக் கல்வியின் பங்கு அளப்பெரியதாக உள்ளது.எனவே இக்கால கட்டத்தில் தொலைநிலைக் கல்வியின் எதிர்பார்க்கையும் அடைவுகளும் பற்றி மதிப்பீடு செய்வது காலத்தின் தேவையாக உள்ளது.

தொலைநிலைக் கல்வியைப் பொறுத்தவரையில் இவ்வாறான அசாதாரண சூழ்நிலையில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை தடையில்லாமல் முன்னெடுப்பதற்கு மிகவும் சிறந்த ஒரு வாய்ப்பாக இக்கல்வி முறை அமைந்துள்ளது. இதன் மூலம் மாணவர்கள் எண்ணற்ற பயன்களை அடைந்து கொள்கின்றனர்.எனவே இக்கல்வியின் மூலம் மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளை திறன்பட மேற்கொண்டு பயனடைய வேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் காலங்கள் வீண்விரயமாவதைத் தடுத்து அதை பயனுள்ள வகையில் மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதும் தொலைநிலைக் கல்வியின் எதிர்பார்ப்பாக உள்ளது.மேலும் மாணவர்களுக்கு சிரமமின்றி வீட்டில் இருந்தவாறே கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான வசதிகள் இருப்பதனால் மாணவர்கள் அதனை சரிவரப் பயன்படுத்தி கல்வி மட்டத்தில் உச்ச நிலைக்குச் செல்ல வேண்டும் என்பதும் இக்கல்வியின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கல்வியின் மூலம் மாணவர்கள் பல அடைவுகளை அடைந்து கொள்கின்றனர். உதாரணமாக மீள் திறன் மாணவர்கள்,மெல்லக் கற்போர்,கற்றல் குறைபாடு உள்ளோர், சிறப்புக் குழந்தைகளுக்கு இக்கல்வி முறை வரப்பிரசாதமாக அமைகிறது.அதே போன்று சிறந்த கல்வி நிலையங்களுக்கான அலைச்சல், கல்வி நிலையக் கட்டமைப்பு, சிறந்த ஆசிரியர்களுக்கான தட்டுப்பாடு ஆகியவற்றுடன் புத்தகப் பொதி,பள்ளிக் கல்லூரிக்கான பயணம், நேரவிரயம் போன்றவற்றில் இருந்தும் மாணவர்களுக்குப் பெரும் விடுதலை கிடைக்கின்றது.

மேலும் கூறுவதாயின் வகுப்பறைக் கற்றலை விட தொலைநிலைக் கல்வி முறையில் மாணவர்கள் கூடுதல் திறன்களைப் பெறுவது சாத்தியமாகிறது. ஏனெனில் வெவ்வேறு கல்வி நிறுவனங்களின் வாயிலாக ஒரே

நேரத்தில் பல்வேறு படிப்புக்களைப் பெறுவதும் உயர்கல்விக்கு உதவுகின்றது.வருங்காலத்தின் பன்மயப்பட்ட தொழில் வளர்ச்சியை எதிர்கொள்ளும் பணித்திறனுக்கு அவை ஈடுகொடுக்கின்றன.

இக்கல்வியின் மூலம் எங்கிருந்தும் எப்போதும் கல்வியைப் பெற முடிவதும் அதை அனைவருக்கும் சாத்தியமாக்குவதும் தான் இதன் முக்கிய பயனாக இருக்கிறது.மேலும் இக்கல்வியின் மூலம் மாணவரின் இயல்பு தனித்துவத் தன்மைக்கு ஏற்ப கற்றலைப் பெற முடியும்.

தொலைநிலைக் கல்வியின் மூலம் கிடைக்கும் அடைவுகளாக பூகோள எல்லைக் கோடுகளை அழித்து சாமானிய மாணவர் ஒருவருக்கு உலகின் தலை சிறந்த பேராசிரியர்களின் மூலம் பாடங்களைக் கேட்டுக் கொள்ள முடிவதும் அவர்களிடம் சந்தேகங்களைத் தீர்த்துத் தேவையான வழிகாட்டுதல்களைப் பெற்றுக் கொள்ள முடிவதையும் உதாரணமாகக் கூறலாம். மேலும் இக்கல்வியின் மூலம் மாணவர்களின் தேவை, விருப்பம் ஆகியவற்றைப் பொறுத்து பாடங்களைப் படிக்கவும் முடியும்.

எனவே இவ்வாறான அசாதாரண சூழ்நிலையில் தொலைநிலைக் கல்வியின் வகிபங்கு கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது.எனவே மாணவர்கள் என்ற வகையில் நாம் இக்கல்வியின் மூலம் எதிர்பார்க்கப்படும் விடயங்கள் மற்றும் இதனால் அடையும் பயன்களை விளங்கி பூரண பயனைப் பெற்றுக் கொள்ள முன்வர வேண்டும்.



# மாறிவிடுவோம்

உக்காத கழிவுகள்
உலகில் அழிவதில்லை
சிக்காத மீன்கள்
வலையினுல் வாழ்ந்ததுமில்லை
நிக்காத உலகம் எப்போதுமாய் சுழன்றிட
தப்பான ஆய்வால் ஒப்பானது கோரோனா

ஏங்காத சிறுவர்களில்லை
வாங்காத ஊண்களில்லை
தாங்காத நாட்களுமில்லை
இங்கே positive ஆகும்வரை

உயிருள்ள 6 உட்கார்ந்து கொள்ள
உயிரற்ற 5 ஊசலாடும் காலமிது
என்றும் 5ற்கு வேற்றுமையில் ஒற்றுமை
இந்த 6ற்கோ வேண்டாமே வேற்றுமை

துனித்துண்டு மூக்கை மறைக்க
உடுத்துண்டு வீட்டில் முடங்க
படை வண்டிகள் ரோட்டில் உலாவிட
விடை கானா நாட்கள் பல மேலோங்கின

படைப்பால் 700 கோடி முகங்கள்
எழும்போதெல்லாம் முகக்கவசங்கள்
தும்மும் போதெல்லாம் மனக் கஸ்டங்கள்
விம்மும் போதெல்லாம் ஆங்கே மரணங்கள்

இறைவனின் சீற்றம் இன்னும் அடங்கள
மனிதனின் மாற்றம் அத்தனைக்கும் கேட்கல
மாற்றம் ஒன்றே மாற்றிச் செல்லும்
அது மாறும் வரை நாம் மாறிவிடுவோம்

தொலைநிலைக் கல்வி
முகநிலைக் கல்வியாய் ஜொலித்திட
கொரோனாவே, உன் பயணம் ஓய்ந்திட
வேண்டும் - நாம்
கல்வியின் ஒளியால் ஓங்கிட வேண்டும்.



# தொலைநிலை கல்வியின் எதிர்பார்க்கையும், அடைவுகள் அடையப்பெறுகின்றனவா?

M.R. ASHFAK AHAMED (SEU/IS/19/IC/208)
1ST YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

கொரோனா அச்சமும் அவநம்பிக்கையும் உலகம் எங்கும் பரவிக் கிடக்கின்றன. கல்வி வளாகங்கள் மட்டுமல்லாமல் திரையரங்குகள், வணிக வளாகங்கள், சிறுவர் பூங்காக்கள் அனைத்துகளிலும் பூட்டுகள் தொங்குகின்றன.இக்கோவிட் நிலைமையானது உலகளாவிய ரீதியில் காணப்படுகின்ற அனைத்து துறைகளிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதனை நடைமுறைச் சூழலில் எம்மால் கண்டுகொள்ள முடிகின்றது. அந்த வகையில் கல்வித் துறையில் ஏற்பட்ட மாற்றங்களை நோக்கும்போது தற்போதைய அசாதாரண சூழலில் நாட்டில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள், கல்வி நிலையங்கள் என்பன கொரோனா மத்திய நிலையமாக மாற்றப்பட்டுள்ளன. மாணவர்கள் ஆசிரியர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை வீட்டில் இருந்த வண்ணமே மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது. நவீன தொழில்நுட்ப வசதிகள், இணைய வழி தொழில்நுட்பங்கள் என்பன இச்சூழ்நிலையில் மாணவர்களின் கற்றல் சார்ந்த நடவடிக்கைகளுக்கு பாரிய பங்களிப்பு செய்கின்றன என்பது வரவேற்கத்தக்கதாகும். இக்கல்வி முறையானது “HYBRID EDUCATIONAL SYSTEM” என்று அழைக்கப்படுகின்றது உலகின் பிரசித்தமான நாடுகள் பல்கலைக்கழகங்கள் என்பவற்றில் இம்முறையில் தான் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கல்வி முறையானது கற்றல் சார் துறையின் உச்சகட்ட வளர்ச்சி என்று கூறமுடியும். நாளுக்கு நாள் வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்ப உலகில் கல்வியும் கல்விசார் நடவடிக்கைகளும் “SMART” ஆக மாறி ஸ்மார்ட் கல்விமுறை தற்போதைய சூழ்நிலையில் உலகமெங்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இக்கல்வி முறையினால் ஏற்பட்ட மாற்றங்களை நோக்கும்பொழுது மாணவர்கள், ஆசிரியர்களுக்கு வீட்டிலிருந்தவாறே தனது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை இலகுவாக மேற்கொள்ள முடிகின்றது. பல்வேறு வேலை நிமித்தம் கல்வியினை தொடர முடியாத நிலையில் இருந்தவர்கள் குறிப்பாகப் பெண்கள் தொலைநிலைக் கல்வி முறை மூலம் மிகச்சிறந்த அனுகூலங்களை பெறுகின்றனர், மாணவர்களிடையே தொழில்நுட்ப அறிவு விருத்தியடையும் நிலை காணப்படுகின்றது. இருப்பினும் இவ்விணைய வழிக்கல்வியில் மறுபுறம் சற்று உற்று நோக்கிப் பார்க்கும் பொழுது மாற்றமான தனிநபர், சமூகம், உடல் சார் பிரச்சினைகளும் தோன்றுவதற்கு வழிவகுக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் இணையவழிக் கல்வி முறையானது மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளை இலகுபடுத்துவது மட்டுமல்லாமல் அவர்களை திசை திருப்ப கூடிய ஊடகமாகவும் காணப்படுகின்றது. சமீபத்திய ஒரு ஆய்வறிக்கையின் படி மாணவர்கள் கற்றலுக்காக நேரத்தை செலவழிப்பதை விட பல மடங்கு நேரங்களை வீன் விளையாட்டுக்கள்,

அரட்டைகளில் இணையவழியில் செலவழிக்கின்றனர் என்பது முடிவாகும். இன்னும் அதிக நேர தொலைத்தொடர்பு சாதனங்களை பாவிப்பதனால் கண்பார்வை கோளாறு, போதிய உறக்கமின்மை தொடர்பான பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர். இத் தொலைக் கல்வி முறையில் மற்றொரு பக்கத்தை கவனிக்கும்போது போது வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்கள் தொலைக் கல்வியினை பெற்றுக் கொள்வதில் பாரிய சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக இலங்கையின் மலையக வாழ் மக்கள் தமது அன்றாட வாழ்வாதார தொழில் இன்றி தவிக்கும் இச்சந்தர்ப்பத்தில் தொலைநிலைக் கல்விக்காக செலவிடுவதில் பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றனர். இது தவிர இணையவழிக் கல்விமுறையின் மூலம் ஆசிரியர்களால் வழங்கப்படுகின்ற தகவல்களை முழுமையாக மாணவர்களுக்கு சென்றடைவதில் சில சிக்கல் நிலையும் காணப்படுகின்றது.

இன்றைய நவீன உலகில் பல்வேறு தொழில்நுட்ப வசதிகள் காணப்படும் போதிலும் கல்வி நடவடிக்கைகளில் எதிர்பார்க்கின்ற அளவு அடைவுகளை அடைய முடியாதுள்ளது என்பது ஏற்க முடியாது இருக்கின்றது.

சீனதேச கொடுங்கோலன்
சிகரம் தொட்ட அரக்கன்
கொரோனா எனும் மாபாதகன்....
அடிக்கிபோட்டது அனைவரையும்
சிறைக்கைதிகளாய்...
உள்ளத்தால் தவிக்கிறோம்,
வேதனையால் வாடுகிறோம்
மனமுடைந்து...
கல்வியின் உச்சம் செல்ல

புதுப்புது தொழினுட்ப வளர்ச்சி
புதிய ஆப்ஸ்களின் வருகை...
ஜூமில் கற்றல், மாயஜால வித்தை...

கற்றலுக்கு தடை
கனெக்சன் ப்ரோப்லேம்...
சிலநேரம் வகுப்பை
ரத்து செய்வதும் கூட...
உற்சாகமாய் கற்க நினைத்தாலும்



# ஏற்க முடியா உண்மை

A. AFROSE, 3RD YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA



சங்கமமானோம் இலங்கை தென்கிழக்கிற்கு...
எண்ணிலடங்கா ஆசைகளையும்
சொல்லமுடியா கனவுகளையும்
சுமந்த எமக்கு...
யார் செய்த பாவமோ
அக்கனவுகளையும், ஆசைகளையும்
நிஜத்தில் நிலைபெறச் செய்யாத
கையாலாகாத நிலை....
பரிதவிக்கிறோம் கனவை நனவாக்க....

கொரோனாவின் சாகசம்
உச்சம் தொட்ட வறுமை...
உன்னால் படும்
துன்பக்களுக்கு அளவே இல்லை....

வெறுத்து விடும் அளவுக்கு
மாற்றி விடுகிறது இணைய வழிக்கற்றல்
தானே படிக்கா விட்டாலும்
பரீட்சை எழுதிவிடலாம்
என்ற நம்பிக்கை...

இத்தனைக்கும் காரணம்
கொரோனா எனும் காவி
ஏற்கத்தான் முடியவில்லை
இருந்தும் ஏற்கிறோம்
மனிதனாகப் பிறந்து விட்டோம்
என்பதற்காக...
கசப்பான உண்மையை...!!!!



# மாய உலகின் கல்வி

**M.I. ILMA (SEU/IS/18/IC/071)**
2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

காலச்சக்கரத்தில் ஒவ்வொரு காலகட்டத்திலும் இந்த உலகை புரட்டிப் போடக்கூடிய ஒரு நிகழ்வு நடந்துக் கொண்டுதான் இருக்கிறது. அந்த அடிப்படையில், ஒரு சிறு வைரஸ் முழு உலகையும் ஒருசேர உலுக்கி விடும் என்று யாரும் நினைத்துக்கூட பார்க்கவில்லை. ஆனால், இந்த கொரோனா வைரஸ் பரவலினால் சமூகத்தில் பலதுறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இன்னும் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன.

நாளுக்கு நாள் பரவிக் கொண்டு செல்லும் இவ் வைரஸின் தாக்கத்திலிருந்து ஒட்டுமொத்த சமுதாயத்தை பாதுகாப்பதே மனித குலத்தின் இன்றைய தேவைப்பாடாக காணப்படுகின்றது. இந்தக் கொரோனா நாளுக்கு நாள் பல உயிர்களை காவு கொள்கின்றது. இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களோ ஏராளம். தனது உறவுகளையும், உடன் பிறப்புகளையும் இழந்து தவிக்கும் மனிதர்களின் நிலைமையும் கவலைக்கிடமானது தான். அனைவரும் வீட்டுக்குள் முடங்கிக் கிடப்பதால் பலதுறைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருக்கிறன. அதிலும் குறிப்பாக, மாணவர்களின் கல்வி நிலையில் பல தாக்கங்கள் ஏற்பட்டுள்ளமையை எம்மால் அறிய முடிகின்றன.

கொவிட் 19 அசாதாரண சூழ்நிலை காரணமாக கல்வி நடவடிக்கையில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அது எவ்வாறு என்றால் பாலர் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை அனைத்து மாணவர்களும் இன்று தனது கல்வி நடவடிக்கைகளை தொலைநிலை கல்வியின் மூலம் முன்னெடுத்துச் செல்வதை காண முடிகின்றன.

கல்வியின் எதிர்பார்க்கை என்பது, ஒரு சிறந்த தொழிலை பெற்றுக் கொள்வதோடு முற்றுப் பெறுவதில்லை. அது எதிர்கால சமூகத்தில் சிறந்த ஒரு மனிதனை உருவாக்க வேண்டும் என்பதனையும் ஒரு பிரதான நோக்காக கொண்டுள்ளது. தனக்கும், தனது குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் பிரயோசனம் அழிக்கக்கூடிய ஒரு கல்வியே மனித சமூகத்திற்கு அவசியம் என்பதுதான் கல்வியின் எதிர்பார்ப்பும் ஆகும். அந்தவகையில், கொவிட் 19 அசாதாரண சூழ்நிலையில் கல்வி நடவடிக்கைகள் முற்றுப் பெறாமல் இருக்க இன்றைய நவீன விஞ்ஞான வளர்ச்சியின் முன்னேற்றத்தால் உலகிற்கு அறிமுகம் செய்யப்பட்ட தொலைபேசி மற்றும் கணினி போன்ற இலத்திரனியல் ஊடகங்களாவன அனைத்து மாணவர்களும் தமது கல்வி நடவடிக்கைகளை வீட்டிலிருந்தவாறே மேற்கொள்ள உதவியாக அமைந்துள்ளன.

பாலர் பாடசாலை மற்றும் பாடசாலை மாணவர்கள் அங்கு சென்று கல்வி நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்கின்றார்களோ அவ்வாறே தமது வீடுகளிலிருந்தவாறே கொவிட் 19 இன் தாக்கத்திலிருந்து பாதுகாப்பான முறையில் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இத்தொலைநிலைக்கல்வி பெரிதும் உதவிபுரிகின்றது. பாடசாலையில் எவ்வாறு ஆசிரியர்களிடம் தனது சந்தேகங்களை தீர்த்துக் கொள்கின்றோமோ அவ்வாறே தொலைநிலை கல்வியின் மூலம் தமது சந்தேகங்களை தீர்த்துக்கொண்டு தமது கல்வி நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக உள்ளது.

அவ்வாறே தான் பல்கலைக்கழக மாணவர்களது கல்வி நடவடிக்கையை எடுத்துக்கொண்டால், இச்சூழ்நிலையில் பல்கலைக்கழகச் சூழலில் கற்க வேண்டிய வாய்ப்பு இல்லாமல் போய்விட்டதன் பின்னர் அவர்களது கல்வி நடவடிக்கைகளில் காலதாமதத்தை ஏற்படுத்தாமல் தொடர்ந்து அவர்களது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தொலைநிலைக்கல்வி பெரிதும் உதவி புரிகின்றது. இத் தொலைநிலைக் கல்வியின் மூலம் மாணவர்களது கற்றல் நடவடிக்கைகளை வீட்டில் இருந்தவாறே மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது. இதன்மூலம் மாணவர்கள் காலதாமதமின்றி உரிய காலத்தில் தமது பட்டப்படிப்பை முடித்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு உருவாக்கியுள்ளது. உண்மையாகவே, தொலைநிலைக் கல்வியின் பெரியதொரு அனுகூலமாக இதனையே பல்கலைக்கழக மாணவர்கள் உணர்கிறார்கள்.

அதுமட்டுமன்றி, ஏனைய நிறுவனங்களும் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை இத்தொலைநிலைக் கல்வியின் மூலமே மேற்கொள்கின்றன. தொலைநிலைக் கல்வியின் பிரதான நோக்கம் யாதெனில் மாணவர்களது கல்வி நடவடிக்கைகள் உரிய காலத்தில் நடக்க வேண்டும். அதாவது, எந்தவிதமான காலதாமதமும் ஏற்படாத வண்ணம் அவர்களது கல்வி நடவடிக்கைகள் உரிய காலத்தில் முடிவடைய வேண்டும் என்பதாகும். இவ் அசாதாரண சூழ்நிலை காரணமாக அவர்களது கல்வி நடவடிக்கைகள் முற்றுப்பெறாமல் உரிய காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களாயின் அவர்களது பட்டப் படிப்புகளும், பாடசாலை மாணவர்களாயின் அவர்களது பரீட்சைகளும் உரிய காலத்தில் நடைபெற வேண்டும் என்பதாகும்.

எவ்வாறாயினும் இவ் நோக்கங்கள் சரியாக இருந்தாலும் தொலைநிலைக் கல்வியின் மூலம் எதிர்பார்க்கின்ற அடைவை சரியாக அடைந்துகொள்ள முடியாத சூழ்நிலைகளும் உருவாகின்றன. அது எவ்வாறு என்றால் எல்லா மாணவர்களுக்கும் சரியான கற்பித்தல் நடவடிக்கைகள் சென்றடைய முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. எவ்வாறு எனின், இலத்திரனியல் ஊடகங்கள் எல்லா மாணவர்களிடமும் காணப்படுவதில்லை. வசதியற்ற மாணவர்களுக்கு தமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத சூழல் உருவாகின்றன.

அதேபோன்றுதான் சரியான இணையதள இணைப்பு சில பிரதேசங்களுக்கு கிடைப்பதும் இல்லை. இதன் காரணமாக கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் போய்விடுகின்றன.
அதேபோன்றுதான் மாணவர் மத்தியில் ஒழுக்கமற்ற கல்வி போய்ச் சேருகின்றது. வெறும் கல்வி மட்டுமே அவர்களுக்குப் போய்ச் சேருவதில் எந்தப் பலனும் இல்லை. கல்வியோடு சேர்ந்து ஒழுக்கம், பண்பாடு என்பனவும் வளர வேண்டும் என்பதே கல்வியின் பிரதான நோக்கமாகும். இந்த எதிர்பார்ப்பை அடைய முடியாத சூழ்நிலை உருவாகி உள்ளது.

இவ்வாறான பல எதிர்பார்ப்புக்களை கொண்ட தொலைநிலைக் கல்வியில் இவ்வாறான அடைவுகளையே இன்று அடைய முடியுமாக உள்ளன. என்றாலும் எந்த ஒரு விடயத்தை எடுத்துக்கொண்டாலும் எதிர்பார்க்கின்ற எல்லா விடயங்களையும் அடைவது என்பது சாத்தியமற்ற ஒரு விடயமாகும். அவ்வாறேதான் இந்த தொலைநிலைக்கல்வி நடவடிக்கையிலும் ஏற்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.



# கொவிட் 19 அசாதாரண சூழ்நிலையில் தொலைநிலைக் கல்வியின் சாதக பாதக விளைவுகள்.

M.M FATHIMA MIHNA
1ST YEAR
FACULTY OF ISLAMIC STUDIES
& ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF
SRI LANKA

நாட்டில் தற்போது நிலவுகின்ற அசாதாரண சூழ்நிலையில் கொவிட்-19 வைரஸ் தொற்று முக்கியமானதாகும். இதனால் சமூகம் பல இக்கட்டான பிரச்சினைகளை சந்தித்துள்ளது மற்றும் பலவற்றை இழந்தும் உள்ளது. அதில் மாணவர்களின் கல்வி நிலையில் உள்ள பிரச்சினைகளும் அதில் ஏற்பட்ட மாற்றங்களும் மிக முக்கியமானதாகும்.

இந்த கொவிட்-19 சூழ்நிலையினூடாக நாடு முடக்கப்பட்டதன் காரணமாக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சார்ந்த ஊழியர்கள் அனைவரும் வீட்டில் இருந்ததனால் கல்வியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.அச்சமும் அவநம்பிக்கையும் உலகெங்கும் பரவியிருப்பதனால் மாணவர்கள் வீட்டில் முடங்கியுள்ளனர். அலுப்பூட்டும் தெரிந்த முகங்கள, சலிப்பூட்டும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அல்லது வீடியோ விளையாட்டு என வீடே சிறையாகி விட்டதனால் கற்றலை விட கூடுதல் இறுக்கத்தை இந்த விடுமுறை அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. இந்த அலுப்பையும் சலிப்பையும் வெல்வதுடன், அறிவையும் திறனையும் மேம்படுத்தி விடுமுறையை பயனுள்ளதாக மாற்றும் வல்லமை இணைய வழிக் கல்விக்கு உண்டு.

இதற்காக Zoom, Team, Skype, Google Classroom, Udemy போன்ற மென்பொருட்கள் இத்தொலை நிலை கல்விக்கு பயன்படுத்தப்படுகிறது. இத்தொலை நிலை கல்வி மூலம் சமூகத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அதில் சாதகமான மாற்றங்களும் பாதகமான மாற்றங்களும் உள்ளன. சாதகமான மாற்றங்களுள் அறிவை மேம்படுத்தும் வகையில் விடுமுறையை களித்தல், கல்வியை இடைநிறுத்தாது தொடர்ச்சியாக பேணல், ஆசிரியர்களுக்கிடையிலான தொடர்பை பேணல் போன்றவைகளை குறிப்பிடலாம்.

எவ்வாறான போதிலும் நன்மைகளுக்கு எதிராக தீமைகளும் இருந்து கொண்டு தான் இருக்கிறது. அவற்றுள் கவறேஜ் பிரச்சினை, மாணவர்களுக்கு உடல், உள ரீதியான பாதிப்புகள், மாணவர்கள் சமூக வலையமைப்பின் ஊடாக தகாத நட்புகள் ஏற்படுதல் மற்றும் தவறான தொடர்புகளும் ஏற்படுகின்றன. மேலும், தொலைநிலைக் கல்வியின் மதிப்பீட்டை ஆய்வாக கொண்ட ஆய்வாளர்கள் வெளியிட்ட கருத்துக்கணிப்பீட்டின் படி நூற்றுக்கு அரைப்பகுதியான மாணவர்கள் வறுமை காரணமாக தொலைநிலைக் கல்வியினை தொடர முடியாதவர்களாக காணப்படுகின்றனர். எவ்வாறெனின் பரீட்சை காலங்களில் தொலைநிலைக் கல்வியினை தொடரக் கூடிய மாணவர்கள் பரீட்சைகளில் தோற்றக்கூடியதாகவும் சிறந்த அடைவுகளை பெறக்கூடியதாகவும் உள்ளனர். அதே நேரம் வறுமை கோட்டின் கீழ் வாழுகின்ற மாணவர்கள் பரீட்சைக்கு தோற்ற முடியாமலும் சிறந்த அடைவுகளை பெற முடியாமலும் உள்ளனர். எனவே, இந்த Covid-19 அசாதாரண சூழ்நிலையினால் தொலைநிலைக் கல்வி முறையின் எதிர்பார்ப்பும் அடைவும் மதிப்பீடும் இவைகள் தான் என்றால் மிகையாகாது.




# வசதிபடைத்தவர்களுக்கா கல்வி?

**M.A.S. MUNEERA PSYCHOLOGICAL COUNSELLOR ® (CHSMC)**
3RD YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

முன்னைய தலைமுறையில் அஞ்சல் வழிக் கல்வியாக அறிமுகப்படுத்தப்பட்ட தொலைநிலைக் கல்வி முறையானது இன்று இணைய வழி கற்றகை முறையாக மாற்றம் பெற்றுள்ளது. வெளிவாரிப் பட்டதாரிகள் பட்டப்படிப்பினை இலகுவான முறையில் பூர்த்தி செய்து கொள்வதற்காக வேண்டி தொலைநிலைக் கல்வி முறையினை அதிகம் பயன்படுத்தினர். ஆனால் இன்றைய உழஎனை-19 காரணத்தினால் கல்வி நடவடிக்கை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் தொலை நிலை கல்வி முறையை பின்பற்றுகின்றனர்.

இணைய வழி தொலைநிலைக்கல்வி காக WhatsApp , zoom, YouTube, Google plus, Google meet , Google form,VLE, MMS,LMS போன்ற செயலிகளில் பாவனையின் ஊடாக கற்றல் கற்பித்தல் செயன்முறை இடம்பெறுகின்றன. கோவிட் 19 காலநிலையில் கல்வியை அனைவரும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் அரசாங்கம் பிரபல்யமான ஆசிரியர்களைக் கொண்டு தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஊடாகவும் வானொலி அலைகளின் ஊடாகவும் கற்றல் கற்பித்தல செயல்முறையினை ஆரம்பித்துள்ளது.

வெளிநாடுகளில் சென்று கற்கவேண்டிய பட்டப்படிப்பினை இன்று தொலைநிலை கல்வியின் மூலம் நம் வீடுகளில் இருந்தவாரே பெற்றுக் கொள்ள முடிகின்றது. இதனால் காலம், நேரம், பணம் விரயம் குறைவடைந்துள்ளது. இதனால் தான் தொல்லை இல்லா தொலைநிலைக்கல்வி என்கின்றனர்.

தொலைநிலைக் கல்வி முறையின் அடையப்பெற்ற அடைவுகளை பார்க்கையில் ஒருவர் தொலைநிலை கல்வியை பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால் கையடக்க தொலைபேசி அல்லது மடிக்கணினி போன்ற வசதிகள் கட்டாயம் அவசியமாகின்றது. ஒவ்வொருவரிடமும் இவ்வசதி இருக்கின்றனவா என பார்க்கையில் இந்த வசதி அனைவரிடத்திலும் இல்லை அத்துடன் அனைவரிடமும் தொழில்நுட்ப அறிவு இருக்கின்றனவா என பார்த்தால் பெரும்பாலோனோரிடம் அடிப்படை தொழில்நுட்ப அறிவு இல்லாத நிலை தொடர்ந்தும் மொழி ரீதியான சிக்கல்கள் ஏற்படுகின்றன. பாடசாலை மாணவர்களை நோக்கும்பொழுது விளையாட்டுத்தனமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இதனால் வகுப்புகளை அவதானிக்கின்ற இல்லையா என்று ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அறிவதில்லை. தொலைநிலைக்கல்வி வகுப்பில் கலந்து கொண்டு கற்க முடியாத மாணவர்கள் அதிகம் இதனால் இவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுகின்றது.

இந்த தொலைநிலை கல்வியின் மூலம் அதிகமான மாணவர்கள் உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதோடு உடலியல் ரீதியாகவும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இதில் தலைவலி, கண் பார்வை குறைவடைதல், கண் கூச்சம் போன்றவற்றை குறிப்பிடலாம்.

தொலைநிலை கல்வியின் மூலம் மாணவர்கள் அதிகமானவர்கள் பயனடைகிறார்களா? என நோக்கும் போது பிரதிபலிப்பு குறைவே, காரணம் இணைய வசதியில்லாத வலையமைப்பு தொடர் வசதி சரியான முறையில் கிடைக்கப்பெறாமை இதனால் வகுப்புகளில் கற்க பெரிதும் பாதிப்பு ஏற்படுகின்றது. வலையமைப்பு தொடரினை சரியான முறையில் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக வேண்டி உயரமான இடங்களிலும், உயரமான மரங்களின் மேலும், உயரமான கட்டிடங்களின் மேலும், பாறைகளின் மேலும் அமர்ந்தது வலையமைப்பு சிக்களினை நிறைவேற்றிக் கொள்வோம் என்று வெளியிடங்களுக்கு செல்கின்றனர். இதற்கு காரணம் கல்வியினை சிறப்பான முறையில் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கு அயராது பாடு படுகின்றனர். மாணவர்கள் இதனால் பல பாதிப்புகளுக்கும் முகம் கொடுக்கின்றனர். வலையமைப்பு தொடர் சரியான முறையில் பெற்றுக் கொள்ளலாம் என அதிகாலையிலும் இரவு நேரங்களிலும் அதிகமான வகுப்புகள் நடைபெறுகின்றன. இதனால் பல இடர்களை குடும்ப ரீதியாகவும் வலையமைப்பு தொடரினை சிறப்பான முறையில் பெற்றுக் கொள்ள வெளியிடங்களுக்கு செல்ல முடியாத நிலை என்று பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

வீடுகளில் கல்வியை தொடர முடியாத நிலையில் உள்ள மாணவர்கள் எம் நாட்டில் அதிகம். அனைவருக்கும் கல்வி என்ற நிலை மாறி தொலைதொடர்பு வசதிகள் இருப்பவர்கள் மட்டுமே கல்வி என்ற நிலை உருவாகி விட்டது . தொலைநிலை கல்வியை தொடர முடியாத ஏழை மாணவர்களுக்கு கல்வி என்பது கிடைக்காமல் செல்லலாம். இனிவரும் காலங்களில் வசதிபடைத்தவர்கள் கல்வியை பெற்றவர்களாகவும் வசதியற்றவர்கள் கற்காதவர்கள் என்ற எம் மூதாதையர்கள் கொண்டிருந்த நிலையே எம் வருங்கால சந்ததியினர் கொண்டிருப்பர். என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.




ஏழை மகன் என்னை
இன்னும் ஏழ்மையாய்
மாற்றிவிட்டது..
கொரோனா...

கஷ்டப்பட்டு அப்பா
சொச்ச பணம்
சேர்த்து..
கொப்பி பேனை
வாங்கி
பத்திரமாய்
படிமகனே... நீ தான்
எம்மை இனி
கவனமாய்
பார்க்க வேண்டும்...
என
அன்புக் கட்டளை
விட்டாரே...

ஸ்மார்ட் போனை
தொட்டுப்பார்க்காத
ஏழை மகன் நான்...
இன்று என் ஸ்டடி
எல்லாம்
ஸ்மார்ட் போனில்

ஸ்மாட்டாய் போவதாய்
அடுத்த வீட்டு நண்பன்
முக மலர கூறியதை
அக மலர என்னால்
ஏற்க முடியாதிருக்கிறது...

ஏழையாய் பிறந்து
ஏழ்மையில்
வளர்ந்தாலும்
ஏழ்மையை
உணரவிடாமல் அப்பா
கல்வியை
தொடரவிட்டார்..
ஏழைமகன் தலைவனாய்
வர வேண்டும் என்று...
எனினும் இன்று
கல்வியில்
ஏழ்மை உணர்கிறேன்
ஸ்மார்ட் போன்
ஸ்டடியால்...

ஏழைமகன்..
ஏழ்மையாய்
மாறிவிட்டான்...!!



# கொவிட் 19 அசாதாரண சூழ்நிலையில் தொலைநிலைக் கல்வியின் சாதக பாதக விளைவுகள்.


N.A.F. NUSKA
1ST YEAR
FACULTY OF ISLAMIC STUDIES
& ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF
SRI LANKA


கொவிட் -19 எனப்படும் கொரோனா வைரசானது 2019 ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சீனாவில் வூஹான் நகரில் அடையாளம் காணப்பட்ட இவ்வைரசானது தற்போது உலகளாவிய ரீதியில் பெரும் மாற்றத்தையும் பிரச்னைகளையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வைரசினால் நாளுக்கு நாள் உயிரிழப்புகளும், பாதிப்புக்களும் அதிகரிக்கின்றனவே அன்றி குறைந்தபாடில்லை. இவ்வைரசின் தாக்கத்தினால் இலங்கை மட்டுமன்றி அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடையாத அனைத்து நாடுகளும் பல இன்னல்களுக்கு முகம்கொடுத்துக் கொண்டுருக்கின்றன. அவற்றுள் கல்வியும் ஒன்றாகும்.

கொரோனா வைரஸ் உலக நாடுகளை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் சூழலில் பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்கள் என அனைத்தும் பொது முடக்கத்தின் விளைவால் முடங்கிப்போயுள்ளன. இச் சூழ்நிலையில் மாணவர்களாகிய எமது பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளது. என்பதனால் மாணவர்களுக்கு இணையவழிக் கல்வி இன்றைய சூழலில் பெரிதும் தேவையாகும். விளைவால் முடங்கிப்போயுள்ளன. இச் சூழ்நிலையில் மாணவர்களாகிய எமது பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளது. என்பதனால் மாணவர்களுக்கு இணையவழிக் கல்வி இன்றைய சூழலில் பெரிதும் தேவையாகும்.

தொலைநிலைக் கல்வியானது முன்னைய தலைமுறையில் அஞ்சல் வழிக்கல்வியாகவே அடையாளம் காணப்பட்டது. ஆனால் தற்காலத்தில் தொழில்நுட்ப வளர்ச்சியினால் தற்போது காணப்படும் அசாதாரண சூழ்நிலையினாலும் தொலை நிலைக்கல்வியானது இனணயவழியாக மாறிவிட்டது.

தொலை நிலைக்கல்வியானது அதிதிறன்பேசி (Smartphone), மடிக்கணினி (Laptop), கணினி (Computer) போன்ற தொழில்நுட்ப கருவிகளின் மூலம் கல்வியை மேற்கொள்ள துனணசெய்கின்றன. பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்களில் பலவசதிகளோடு இணையக்கல்வியானது கற்பிக்கப்பட்டு வருகின்றன. அதற்கு Webinar Google, Meet, Zoom முதலிய செயலிலிகள் மூலம் கல்வியானது தொடர்கின்றது. எனினும் இத் தொலைநிலைக் கல்வியானது பல சாதகபாதகங்களைக் கொண்டிருக்கின்றன.

சாதகங்களை எடுத்துக்கொண்டால் வேலைகளை செய்துக்கொண்டே கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடலாம், வீடுகளில் இருந்துக்கொண்டே கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடலாம், கல்வி நிலையங்கள் மூடப்பட்டிருந்தாலும் கற்றல் நடவடிக்கை தடைப்படாமல் காணப்படுகின்றன. மேலும் தொழில்நுட்பத்தை கையாளும் திறன் வளர்ச்சியடையும், மாணவர்களின் கல்வித்தேடல் அதிகரிக்கின்றன, தேடலின் மூலம்

அறிவுறுத்திறன் விருத்தியடைகிறது. இவ்வாறான சாதகமான விடயங்கள் காணப்பட்டாலும் பாதகங்களும் காணப்படுகின்றன.

மேலும் பாதகங்களாவன வறிய மாணவர்களுக்கு கல்வியை தொடரமுடியாமை காரணம் அதிதிறன்பேசியின்மை, ஒரு சில இடங்களில் இணைய இணைப்பு கிடைக்காமை, ஒவ்வொரு வீடுகளிலும் இரண்டு அல்லது மூன்று பிள்ளைகள் காணப்படுகின்றனர் அனைவருக்கும் ஒரே நேரத்தில் பாடங்கள் காணப்படுவதால் ஒருவருக்கு மாத்திரமே கல்வியை தொடரமுடிகின்றமை, அதுமட்டுமன்றி அதிக நேரம் தொழில்நுட்ப கருவிகளைப் பயன்படுத்துவதால் தலைவலி, கண்பாதிப்பு மற்றும் மன அழுத்தம் போன்ற உடலியல் பிரச்சனைகளும் செயலிலிகளில் இடையிடையே பிரசுரிக்கப்படும் விளம்பரங்களினால் கவனச்சிதறல், மேலும் கைபேசி, மடிக்கணனி போன்றவை வெப்பமாவதுடன் தொடர்ச்சியாக பயன்படுத்துவதால் திடீரென செயழிலத்தல், மேலும் ஒருசில பாடசாலைகளிலே இணைய வழிக்கல்வி நடைப்பெறுகின்றமை, இவ்வாறு இணைய வழிக்கல்வி மேற்கொள்ளப்படாத மாணவர்களுக்கு இது பிரச்சனையே. மேலும் பல்கலைக்கழக கல்வியை எடுத்துக்கொண்டால் அதில் பல்வேறு துறைகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒரு சில துறையானது பரிசோதனைகள், செய்முறைத் பயிற்சிகள் கற்பிக்கப்படுகின்றன. அவ்வாறான மாணவர்களுக்கு செய்முறைத் பயிற்சிகள் மேற்கொள்ள வசதியின்மை.உதாரணமாக: மருத்துவ பீடத்திலுள்ள துறைகளை குறிப்பிடலாம்.

மெய்நிகர் வகுப்பறைகள், வீடியோ பயிற்சிகள், இணையதள உதவிகள் மேலும் இணைய வழி பரீட்சை என தொலை நிலைக்கல்வியானது பல நவீன முறையில் கல்வி தொடர்ந்தாலும் வழக்கமான வகுப்பறை சூழல், வருகைப்பதிவு, நேரடி கற்றல்,கற்பித்தல், சந்தேக நிவர்த்திக்கான வாய்ப்புக்கள் போன்ற வாய்ப்புக்கள் தொலை நிலைக்கல்வியில் குறைவு. மேலும் வகுப்பறை சூழலானது அமைதியான கற்றலுக்கு எற்ற இடமாக காணப்படும். தொலை நிலைக்கல்வி அதாவது இணையவழி மூலம் மாணவர்கள் வீட்டிலிருந்து கற்பதால் கற்பதற்கான சிறந்த சூழல் காணப்படுவது குறைவு. தொலை நிலைக்கல்வியில் இதுபோன்ற பல பாதகங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான அசாதாரண சூழ்நிலையில் தொலை நிலைக்கல்வியானது தற்காலிக தீர்வாகவே காணப்படுகின்றது.

எமது நாட்டை பொருத்தவரையில் தொழில்நுட்பமானது ஓரளவே அபிவிருத்திகண்டுள்ளது. எனவே இச் சூல்நிலையினால் தொலை நிலைக்கல்விக்கு தள்ளப்பட்டிருக்கும் நாம், மாணவர்களின் சூழ்நிலையையும் பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது. இந்த நிலை தொடர்ந்து கொண்டே போனால் மாணவர்களின் கல்வி நிலை கேள்விக்குறியாகவே காணப்படும்.



# தொலைநிலைக் கல்வி

**A.L.F. NUSKIYA**
3RD YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

Covid-19 காலத்தில் நிலவுவது போல் நீண்ட அசாதாரண சூழ்நிலையை நாம் இதுவரை சந்தித்ததில்லை 2019 ஜனவரியில் தொடங்கிய கொரோனா வின் கோர தாண்டவங்கள் நம் அனைவரின் வாழ்க்கையையும் தலைகீழாகப் புரட்டிப் போட்டுவிட்டது இதனால் மக்கள் பலரும் பல இன்னல்களை சந்தித்து வருகின்றனர் கொரோனா வின் சவால்களை சந்திக்க வழியின்றி இலங்கை மட்டுமல்லாமல் உலக நாடுகள் அனைத்துமே திணறிக் கொண்டிருக்கிறன.இந் நோய் பரவலை கட்டுப்படுத்த கல்வி வளாகங்கள் மட்டுமல்லாமல் வணிக வளாகங்கள் பூங்காக்கள் திரையரங்குகள் என அனைத்து இடங்களும் மூடப்பட்டுள்ளது.

### தொலைநிலை கல்வி என்றால் என்ன?

நாம் Covid-19 அசாதாரண சூழ்நிலை காரணமாக நமது வீடுகளிலேயே இருக்கிறோம் இதனால் நமது கற்றல் செயல்பாடுகள் பாதிக்கப்படுகின்றன அந்த பாதிப்பை போக்குவதே இந்த தொலைநிலை கல்வியின் நோக்கம் எனவே நாம் நமது வீடுகளில் இருந்து கொண்டே ஜூம், கூகுள் கிளாஸ் ரூம், கூகுள் மீட், ஈ மெயில் போன்ற இணையதளங்கள் வாயிலாக நாம் கல்வியினை பெறுவதை இந்த தொலை நிலை கல்வி என்ற பதம் குறிக்கின்றது.

பொதுவாக விடுமுறை என்றால் ஒரு கொண்டாட்ட மனநிலை மாணவர்கள் மத்தியில் காணப்படும் ஆனால் கொரோனா வின் அச்சமும் அவநம்பிக்கையும் உலகெங்கும் பரவி இருப்பதாலும் வெளியே செல்லமுடியாமல் வீட்டின் உள்ளேயே முடங்கிக் கிடப்பதனாளும் மாணவர்கள் மத்தியில் ஒரு சலிப்புத் தன்மை காணப்படுகிறது. வீட்டின் நான்கு சுவர்களுக்குள் இருந்துகொண்டு பார்த்த அதே முகங்களைப் பார்த்துக் கொண்டும் தொலைக்காட்சியில் பார்த்த அதே படங்களைப் பார்த்துக் கொண்டும் விளையாடிய அதே வீடியோ கேம்களை விளையாடிக் கொண்டும் என அனைத்திலும் சலித்துப்போன சோர்ந்த முகங்களையே நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

என்றாலும் சமீபகாலமாக உழஎனை-19 அசாதாரண சூழ்நிலையில் விடுமுறைகள் மாணவர்களின் கல்வி செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் மிக முக்கிய ஊடகங்களாக தொலைத்தொடர்பு சாதனங்கள் உதவுகின்றன மாணவர்களுக்கான பாட நெறிகள் மற்றும் கற்றல் செயற்பாடுகள் என்பன வானொலி, தொலைக்காட்சிகளில் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ ஏற்பாடுகளின் கீழ் ஒலி மற்றும் ஒளிபரப்பப்படுகின்றன. அதுமட்டுமன்றி மாணவர்களுக்கு பாடசாலை மற்றும் வளய ரீதியாக ஜ/ம், கூகுள் கிளாஸ், கூகுள் மீட்,வாட்சப் மூலமாக கற்பிக்கப்படுகின்றன அதுமாத்திரமன்றி கல்வி அமைச்சினால் இணைவாயிலான கற்றல்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.உதாரணமாக ஈ தக்சலாவ கல்விக்கூடம் என்பவற்றைக் கூறலாம். அதேசமயம் பல்கலைக்கழகங்களிலும் கூட வீ.எல்.இ,மூடுள், ஈமெயில் போன்ற செயலிகளினூடாக கற்றல்-கற்பித்தல் செயன்முறைக்கு ஏற்றாட் போன்ற சாதனங்களைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு கல்வியை வழங்கி வருகிறார்கள்.

வழக்கமான வகுப்பறைச் சூழல், வருகைப்பதிவு ,நேரடி கற்றல்-கற்பித்தல், சந்தேக நிவர்திக்கான வாய்ப்புகள் போன்றவை குறைவு மற்றப்படி , பட்டம், மதிப்பெண் தகுதி ஆகியவற்றில் நேரடி கல்லூரிக்கும் யு.ஜி.சி அங்கீகாரம் பெற்ற தொலைநிலை கல்விகும் இடையே வேறுபாடு இல்லை. (எஸ்.எஸ்.லெனின்)

இக் கற்றல் முறையில் பல சாதக பாதக விடயங்கள் காணப்படுகின்றன. அந்த வகையில் இதனை இரண்டாகப் பிரிக்கலாம்

1.தொலைநிலை முறையில் படிக்க முடியாத படிப்புகள்.

2.தொலைநிலைக்கல்வி யாருக்குப் பயனளிக்கும். போன்ற விடயங்கள்.

1.தொலைநிலை முறையில் படிக்க முடியாத படிப்புகள்.

மருத்துவம், பொறியியல், சட்டம், கட்டடக்கலை, நர்சிங் பார்மசி,பி.எட் போன்ற பட்டப் படிப்புக்களை தொலைநிலைக் கல்வி முறையில் படிக்க முடியாது அதாவது செயன்முறையுடன் கூடிய தொழில்முறை கற்கைகளை தொலைநிலைக் கல்வி முறையில் பெற முடியாது ஆனால் இது சார்ந்த சான்றிதழ் படிப்புகளை தொடரலாம்.அது நமது திறன் விருத்திக்கான வழியாகவும் காணப்படும்.

2.தொலைநிலை கல்வி யாருக்குப் பயனளிக்கிறது.

பல்வேறு காரணங்களால் படிப்பை இடையில் நிறுத்தியவர்கள், மீண்டும் படிக்க வேண்டும் என நினைத்தால் தொலைநிலை கல்வி முறை நல்ல வழி. புதிதாக ஒரு விடயத்தை கற்றுக்கொள்ள வேண்டும் என நினைப்பவர்கள் ,தான் செய்யும் தொழில் சார்ந்த முறையான படிப்பை படிக்க வேண்டும் என நினைப்பவர்கள் கூட இந்த கல்வி முறையை பயன்படுத்திக் கொள்ளலாம் மேலும் அரச பணியில் இருந்து கொண்டு அவர்களின் பதவி உயர்வுக்கு தேவையான படிப்புகளை தொலைநிலைக் கல்வி மூலமாக கற்கின்றனர், உயர் கல்வியை கற்றவர்கள் ஒரே தடவையில் பல கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இலங்கை மட்டுமல்லாது உலக நாடுகளில் எங்கிருந்தாலும் தொலைநிலைக் கல்வி மூலம் நமக்கு தேவையான கல்வியை கற்றுக்கொள்ள முடியும்.

### தொலைநிலை கல்வியின் எதிர்பார்க்கையும் அடைவுகளும்.

குறித்த ஒரு பல்கலைக்கழகம் தொலைநிலைக் கல்வியை மேற்கொள்வது குறித்த வருடத்திற்குரிய மாணவர்களை குறித்த வருடத்திலேயே அவர்களின் கற்கையை நிறைவு செய்து அவர்களுடைய மேற்படிப்பிற்கும் தொழில் முறைக்கும் வழியமைத்துக் கொடுப்பதற்கே அந்த வகையில் தொலைநிலைக்கல்வி அதனுடைய எதிர்பார்ப்புகளை அடைந்து கொள்கிறது .உதாரணமாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீட 2018ஃ2019 ஆம் கல்வி ஆண்டிற்கான முதலாம் வருட மாணவர்கள் தொலைநிலை கல்வியின் ஊடாக தமது முதலாம் வருடத்தை பூர்த்தி செய்து இரண்டாம் வருடத்தில் காலடி எடுத்து வைத்துள்ளமை இதற்கு ஓர் எடுத்துக்காட்டு எனவே தொலைநிலைக் கல்வி மூலம் தமது எதிர்பார்ப்புகளை அடைந்து கொள்ளலாம்.

கால நேர வீண் விரயங்களைத் தொலைநிலைக்கல்வி நிவர்த்தி செய்கிறது. குறித்த இடத்துக்கு சென்று கற்க்கும் நேரம் மிச்சப் படுத்தப்படுகிறது.அத்துடன் ஒரே வருடத்தில் பல சான்றிதழ் கற்களைக் கற்று முடிப்பதற்கான வசதி காணப்படுகின்றது மேலும் அடுத்தவர்களின் தொல்லை இன்றி கற்கக் கூடிய வசதியும் காணப்படுகிறது

நமது நாட்டில் போதிய அளவு இணைய வசதிகள் காணப்படாமையினால் தொலைநிலை கல்விக்கான அடைவுகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன.இணைய வசதி குறைவினால் மாணவர்களுக்கான கல்வி சரியான முறையில் கிடைக்கப் பெறாமல் உள்ளது என்றாலும் ஐ/ம், கூகுள்,யூட்டியூப்,வட்சாப் போன்றவையினூடாக கல்வியை மேற்கொள்ள கூடிய வசதி காணப்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயம்.

நாடளாவிய ரீதியில் தொலைநிலைக்கல்வி நடைபெற்று வருகிறது கல்வியை வெறுமனே புத்தக சுமையாக மட்டும் கருதாமல் செயல்வழி கற்றல், செய்து கற்றல் போன்ற தொழில் நுட்பம் சார் கற்றல் முறைமைகளைப் பயன்படுத்தி தற்கால உலகிற்க்கு எம்மைத் தயார்படுத்தவும் தொழில் உலகில் தனித்துவமாக பிரவேசிக்ககவும் வினைத்திறனான சமூகத்தை உருவாக்குவதில் தொலைநிலைக் கல்வி மிக முக்கியமானதாகும்.

**உசாத்துணைகள்.**


லெனின் எஸ்.எஸ்(online)"தொல்லையில்லா தொலைநிலைக் கல்வி"(21.mar.17) https://www.hindutamil.in

அபிநயா(online)"திறந்த நிலை,தொலைதூரக் கல்வி முறையில் படிக்க விரும்புபவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை என்ன?"(2021.july.14) https://tamil.news18.com Google.com/amp/s/tamil.r

பிரியங்கா தூபே (online) "வைரசால் மாரிய கல்வி இணையம் இல்லாத மாணவர்களின் எதிர் காலம் என்ன"(27.june.2020) Google.com/amp/s/www.bb https://tamil.news.bb



# கல்விச் சமுதாயத்தின் எதிர்ப்பார்ப்பும், ஏக்கமும்...

**SAHEERA SAMEER (SEU/IS/19/IC/004)**
1ST YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

ஒவ்வொரு தனிநபருடைய இயல்பு வாழ்க்கையையும் ஆட்டம் காண வைத்துக் கொண்டிருக்கும் கொவிட்-19 அசாதாரண சூழ்நிலை நாளுக்குநாள் மோசமடைந்து கொண்டே செல்கின்றது. சாதாரண வாழ்க்கை முறைமைக்கு திரும்புவோமா என்று உறுதியாக கூறமுடியாத நிலையில் பெரும்பாலான தேவைகளை பூர்த்தியாக்கும் மத்திய நிலையமாக இணையத்தளமே செயற்பட்டு வருகின்றது. இணையம் ஆற்றிவரும் பங்களிப்புகளில் கல்வித்துறைக்கு வழங்கிடும் சேவை அளப்பரியது. தொலைநிலைக் கல்வியை நோக்கி திசை திரும்பியுள்ள வாழ்க்கை முறையில் கல்விச் சமூகத்தின் எதிர்பார்ப்புக்களும், அடைவுகளும் எந்தளவுக்கு பூர்த்தி அடைந்துள்ளது என்பதனை மதிப்பீடு செய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

அந்தவகையில் கற்பவர்கள், கற்பிப்பவர்களாகிய இருதரப்பினரதும் முதன்மையான எதிர்பார்ப்பு தடையற்ற தரமான கல்வியை பெற்றுக்கொள்வதாகும். கல்வித்தடை வருடக்கணக்கில் தொடர்ந்தால் அறிவுரீதியான தேக்கநிலையை அடைந்து விடுவோம். பல்லாயிரக்கணக்கான மாணவர்களுடைய எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். அவ்வாறானதோர் இக்கட்டான சூழ்நிலை ஏற்படாது தடுத்து நிறுத்திய பெருமை இணையத்தளத்தின் ஊடான தொலைநிலைக் கவ்வி முறைமைக்கே உரித்தாகும். எனினும் கல்விச் சமூகத்தினரின் எதிர்பார்ப்பை இக்கல்வி முறைமை பூர்த்தி செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்யவேண்டியுள்ளது.

ஆம்! என்று ஒரே வார்த்தையில் திருப்திப்பட இயலாது. தொலைபேசி , கணினித் திரைக்கு முன்னால் அமர்ந்து கவ்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அனைவரும் தனிப்பட்ட ரீதியில் பல்வேறுபட்ட சவால்களுக்கு முகம்கொடுக்கின்றனர். நடுத்தர, ஏழை வர்க்கத்தினரையே பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கையில் வீட்டிற்கொரு கையடக்கத் தொலைபேசி நவீன வசதிகளுடன் இருப்பதே பெரிது. இந்நிலையில் நான்கு மாணவர்களை கொண்ட வீட்டில் ஒரேயொரு தொலைபேசியை வைத்துக்கொண்டு குறித்த அடைவை எவ்வாறு எட்ட முடியும். ஐந்தாம் வகுப்பு மாணவரொருவரிடம் "வீட்ல இருந்துட்டே படிக்குறது பன்(கரெ) தானே.." என்று கேட்டபோது "என்ன ஜொலியேன் தா(னு) த்தா. தலவலி, கண்ணெல்லாம் காந்துர" என்று பதில் சொல்லக்கேட்டு கண்கலங்கி விட்டேன். புத்தகத்திலும், ஆசிரியரிலும் நாளுக்குநாள் புதுமைகளை கண்டறிந்து பிரம்மிக்கும் வயதில் ஆரோக்கியம் குன்றி சோர்ந்து போவதெல்லாம் கல்வி மீதான எதிர்பார்ப்புக்களை பூச்சியமாக்கி விடுகின்றது.

ஆசிரியர் ஒருவருடன் கதைக்கையில் "முதல்முறை நாடு முடக்கப்பட்ட போது 6 மாதங்கள் ஒன்லைனில் கற்பித்தேன். பல சவால்களுக்கு மத்தியிலும் கல்வி நடவடிக்கைகளை விடாது தொடர்ந்தேன். பாடசாலை திறக்கப்பட்டதும் எதிர்பார்த்த அடைவில் பாதியேனும் பூர்த்தியாக்கியிருக்கும் என்ற நம்பிக்கையோடு வகுப்பறைக்கு சென்றேன். ஏமாற்றம் மட்டுமே எனக்காக மிச்சமிருந்தது. "எங்கடூட்ல நெட்வேகில்ல டீச்சர், நாநா யுனிவர்சிட்டில படிக்குறே அதுதான் எனக்கு மொபைல் கெடய்க்கல்ல, வாப்பக்கு வேல இல்லாததால டேடா காட் போட சல்லியில்ல, நான் படிச்ச டீச்சர்! நீங்க ஸ்கூல்ல செல்லித்தார மாதிரி பதியுதில்ல டீச்சர்" இதுபோன்ற மறுத்துவிட இயலாத காரணங்கள் என் முன்னே அடுக்கப்பட்டது. என்னுடைய 6 மாதகால உழைப்பு பலனற்ற நிலையில் வீணாகிட, என் மாணவர்கள் எந்த அடைவுமற்றவர்களாக அடுத்த வகுப்பிற்கு தரம் உயர்த்தப்பட்டு விட்டார்கள் என்பதனை உணருகையில் என்னையே நொந்து கொண்டேன்." என கவலையோடு கூறினார்.

இதேநிலையே பாலர்பாடசாலை தொட்டு பல்கலைக்கழகம் வரையில் நீடிக்கிறது. "எனக்கும் ஸ்டார் போட்டாமே!!" என்று கொண்டாட முடியாமல் பாலகர்களும், "பொதுப்பரீட்சை நடக்குமா?" என்ற கேள்வியோடு சாதாரண மற்றும் உயர்தர மாணவர்களும், பல்கலைக்கழக எல்லைக்குள் வாழும் கனவோடு நாமுமென கவ்விச் சமூகத்தின் எதிர்பார்ப்புக்கள் ஏக்கமாய் உருமாறி அடைவுகளை எட்டவியலாத நிலையிலேயே நகர்ந்து கொண்டிருக்கின்றது.

உறவுகள் அறியா யுகங்களாய்
உற்றார் மறந்தது நிரந்தர
உறக்கத்துக்கு உயிர்களும்
உடல்களும் தயாராகும்
காலம் இது

முகங்கள் எல்லாம்
முகக்கவசங்களுக்கு பின்னால்
முத்திரை பதித்த முகங்களாய்
முதியோரும் முதுகுக்கு பின்னால்

ஏடுகள் எல்லாம் கணினிகளாய்
ஏழ்மையின் பசிகளும் பட்டினியாய்
ஏக்கங்களும் எதிர்பார்ப்புக்களாய்

ஏதும் கரணங்களுமின்றி
வாழும் மனிதர்களாய் நாம்
வீதிகள் எல்லாம் விதிமுறையாய்
வீடுகள் எல்லாம் விளிம்புகளாய்
வியாபாரங்கள் யாவும் விடுகதையாய்
விதியோடு விளையாடும்
விடயமாய் ஆனது எம் வாழ்வு

மனிதா!
மலர்களும் காலம்
வந்தால்தான் உதிரும்
மரணத்தை முந்திக் கொண்டு
வாழ்க்கையை
இழந்துவிடாதே!

# சமூகத்தின் புது வரவு

A.A. NASHATH NUHA, 1ST YEAR
FACULTY OF MANAGEMENT
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA





# தொலை நிலைக் கல்வியின் சாதக, பாதகங்கள் மற்றும் சவால்கள்

M.I.M. SIFNAS (SEU/IS/19/IC/227)
1ST YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

கொவிட் 19 அசாதாரண சூழ்நிலையில் தொலை நிலைக் கல்வியானது பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியில் பல எதிர்பார்க்கைகளை கொண்டுள்ளதுடன் பல சாதகங்களையும் பாதகங்களையும் தொழில்நுட்ப கோளாறுகளையும் சில அடைவுகளையும் கொண்டிருக்கிறது.அது தொடர்பாக மதிப்பிடுவோம்.

தொலை நிலைக் கல்வி என்பது குறிப்பிட்ட ஆசிரியர் ஒருவரினால் தரவொன்றினை ஒரு மாணவச் சமூகத்துக்கு ஓர் இடத்தில் இருந்து வெவ்வேறான பல இடங்களுக்கு இனணய வழி மூலம் தரவொன்றினை கொண்டு சேர்ப்பதாகும்.இதன் மூலம் தகவல் ஒன்றினை மாணவச் சமூகம் ஒன்றுக்கு எவ்வித தடங்களும் இன்றி அவர்களிடம் கொண்டு சேர்ப்பதே இந்நிலைக் கல்வியின் எதிர்பார்க்கையாக காணப்படுகின்றது. இது ஒரு தொழில்நுட்ப வளர்ச்சியின் பெறுமானமே ஆகும்.ஒரு குறிப்பிட்ட மாணவச் சமூகத்துக்கு மாத்திரம் இன்றி பரவலாக பிரதேசம் விட்டு பிரதேசம் நகரம் விட்டு நகரம் நாடு விட்டு நாடாக மாணவச் சமூகம் தங்களது கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்வதே இந்நிலைக் கல்வியின் பிரதான எதிர்பார்கையாகும்.

இந்நிலைக் கல்வி மூலம் மாணவர்கள் பல்வேறான நன்மைகளை அடைகின்றனர்.இந்நிலைக் கல்வி மூலம் மாணவர்கள் தங்களை கொவிட் 19 அசாதாரண தொற்றிலிருந்து பாதுகாக்க முடிகின்றது.இதன் மூலம் மாணவர்கள் தங்களையும் தங்களது சமூகங்களையும் பாதுகாக்கக் கூடிய ஒரு நிலைக்கு இந்நிலைக் கல்வியானது காரணமாக அமைகின்றது.இந் நிலைக் கல்வி மூலம் மாணவர்கள் தகவல்களை குறிப்பிட்ட ஆசிரியரிடம் இருந்து இலகுவாகவும் விரைவாகவும் பெற்றுக் கொள்ள முடிகின்றமை இதன் முக்கிய சாதகமாகும்.அனைத்து பெறுனர்களுக்கும் ஒரே நேரத்தில் தகவல்களை கொண்டு சேர்த்தல் என்பது இதன் பிரதான அடைவாகும்.

இந்நிலைக் கல்வி மூலம் மாணவர்கள் பல்வேறான பாதகங்களையும் அசௌகரியங்களையும் முன்னோக்குகின்றனர். வேவ்வேறான இடங்களில் இருந்து மாணவர்கள் இனணய வழி மூலம் தங்களது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற போது பல தொழில்நுட்ப கோளாறுகள் ஏற்படுகின்றன.இது மாணவர்களுக்கு மத்தியில் பெரும் சவாலாக உருப்பெற்றிருக்கிறது.இது வலையமைப்பு சார்ந்த கோளாறாக காணப்படுகின்றது.இதனால் மாணவர்கள் தங்களது தொலைநிலைக் கல்வியின் மூலம் சரியானதொரு பிரதிபலனை அடைய முடியாமல் காணப்படுகின்றது.இதுவே இந்நிலைக் கல்வியின் பிரதானதொரு அசளெகரியமாக காணப்படுகின்றது.

இந்நிலைக் கல்வியின் மூலம் பல ஆரம்ப நிலைக் கல்வி மாணவர்களும் இயல்பாகவே இனணயத்துக்கு அடிமையாகின்ற நிலையும் காணப்படுகின்றது.அம் மாணவர்கள் உளச்சோர்வு,மன அழுத்தம் போன்ற நிலைகளுக்கும் ஆளாகின்றனர்.அது மட்டுமன்றி அவர்களின் இயல்பு வாழ்க்கைக்கும் இந்நிலைக் கல்வி முறை ஒரு சவாலாகவே காணப்படுகின்றது.அது மட்டுமன்றி அவர்கள் இனணயத்தின் மூலம் தவறான சிந்தனைகளுக்கு இட்டுச் செல்லவும் இந்நிலைக் கல்வி முறை ஒரு சந்தர்ப்பமாகவே காணப்படுகின்றது.ஒரு இளம் கல்வியலாளர் சமூகத்தை உருவாக்குவதில் இந்நிலைக் கல்வி முறையானது ஒரு கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது.

ஒரு சாதாரண குடும்ப பிண்ணனியில் உள்ள மாணவன் அல்லது மாணவி ஒருவருக்கு இக்கல்வி முறை பெரும் ஒரு சவாலாகவே காணப்படுகின்றது.ஏனெனில் அவர்களுக்கு தொலை நிலைக் கல்வியை மேற்கொள்வதற்கான ஒரு ஸ்மார்ட் தொலைபேசி வசதியோ அல்லது ஒரு மடிக்கணினி வசதியோ காணப்படாத சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு அந்நிலைக் கல்வியானது ஒரு சாத்தியமற்ற ஒன்றாகவே காணப்படுகின்றது.இந்நிலையானது மாணவச் சமூகம் ஒன்று இந்நிலைக் கல்வி மூலம் எதிர்நோக்கும் முக்கியமானதொரு ஒரு பிரச்சினை ஆகம்.

தொகுத்து நோக்குவோமாயின்,தொலை நிலைக் கல்வியானது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலான தகவல் பரிமாற்றத்திற்கான ஒரு வலுவான செயன்முறையாக காணப்படுவதுடன் இந்நிலைக் கல்வியின் மூலம் பல எதிர்பார்ப்புகள் காணப்படுகின்றன.அத்துடன் இந் கல்வி முறையானது பல சாதகங்களையும் பாதகங்களையும் சவால்களையும் கொண்டிருக்கின்றது.

கொரோனாவே!
உன் கோரப்பிடியில்
சிறைப்பட்டது எம் வாழ்க்கை.
இயல்புநிலை மாறி
இயந்திரங்களோடு போராட்டம்.
கனவுகளைச் சுமந்து கல்லூரி
நோக்கிய நடைப்பயணங்கள் எங்கே?
கவரேஜ்ஜிக்காய் கூரை முகடுகளில்
காத்திருப்பது எங்கே?

டேட்டாக்களுக்காய் பல
பாட்டாக்கள் தேய்ந்தது.
செல்போன்களுக்காய்
செலவுகள் குறைந்தது.
கால்வயிறு சாப்பிட்டதும்
காலி வயிரானது.

கண் விழித்ததுமே
ஆன்லைன் என்பார்
zoom என்பார்.
கூடவே பாஸ்வர்ட் என்பார்.
புரியாத புதிராய் வாழ்க்கை
சிலதை விளங்கினோம்
சிலதை விழுங்கினோம்.

வெண்கட்டியும்,
வெள்ளைப்பலகையும்

சொல்லித்தந்ததை விடவா
சொல்லப்போகிறாய்? கவரேஜ்
கணுக்களையே நிலையாக
பார்க்க முடிவதில்லை.
கல்வியை எப்படிப் பார்ப்பது?
உன் வேடிக்கை விளையாட்டு
காலாவதியாகிவிட
காத்திருப்புக்களே எச்சம்....

# தொலைநிலைக் கல்வியும் அடைவுகளும்



M.F. NASRIN, 3RD YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA



# கொரோனாவும் நானும்...!!!

NOOR SHAHIDHA, 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

கொரோனா..!
அதன் அதிர்வுகளால்
எனது இளமைக் கனவுகளும்
வீட்டுக்குள் சிறைப்பட்டு போனது..

அமாவாசையில்
நிலவை காண துடிக்கும்
விழிகளை போல..

பாடசாலை நாட்களில்
விடுமுறைக்காக ஏங்கிய மனமோ
இன்று வீட்டில் இருந்து
வெளியேற விடுதலை கேட்கிறது..

புத்தகப் பையை சுமக்கும் போது
தெரியாத வலி புத்தகங்கள்
தொலைவானதும் தெரிகிறது..

இலவச கல்வியை இலவசமாக
படித்த காலம் போய் அதை
கைப்பேசிக்குள் காசு கொடுத்து
படிக்கும் நிலை வந்து விட்டது..

எனது கனவுகளும் எட்டாத
தூரத்தில் நின்று என்னை
ஏளனமாக பார்த்து சிரிக்கிறது..

ஒரு வேளை சோற்றுக்கே
கை பிசையும் எனக்கு
ஒரு கைப்பேசியையா
வாங்கிட முடியும்..?

பட்டினியுடன் பல நாட்களை
கடத்தி அதை வாங்கினாலும்
பலன் ஏது..?

ரீசார்ஜ் ஏதும் இன்றியே
கடைசியில் என்னோடு
சேர்ந்து கைப்பேசியும்
பட்டினியால் வாடும்..!

இலவசமும் கூட பணவசமானது தான்
கொடுமையிலும் கொடுமை..!

இதுவெ ஏழை எனது
வறுமையின் வெறுமை..!

# காதலி

**NASARDEEN FATHIMA SAHI**
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

படைத்த உன்
இறைவனை காதலி..!
உத்தம நபித்தோழர் ரஸூல்(ஸல்)
அவர்களின் வழிமுறைகளைக் காதலி .!

அல்குர்ஆனைக் காதலி....
உன்னை பத்து மாதம்
பத்திரமாக சுமந்த
உன் தாயைக் காதலி....

நீ விழுந்த போதெல்லாம்
உன்னை தூக்கி விட்டு
உன் வெற்றியை தன்
வெற்றி போல் கொண்டாடும்
உன் தந்தையைக் காதலி.....

உன்னுடன் பிறந்த உன்
உடன் பிறப்புக்களைக் காதலி....
உனக்கு எப்போதும்
உறுதுணையாக இருக்கும்
உன் குடும்பத்தைக் காதலி....

உற்ற தோழனாக சில நேரமும்,
சில நேரம் உன் கோபத்தை
வெல்லும் உன் உறவினரைக் காதலி...

உன் நண்பர்களைக் காதலி...
உன் குருக்களைக் காதலி...
உன் கல்வி சாலைகளைக் காதலி...
உன்னை சுற்றி உள்ள
இயற்கையைக் காதலி...
உன் இலட்சியத்தைக் காதலி...

உன் வாழ்க்கையில்
நீ முகம் கொடுக்கும்
ஒவ்வொரு
விநாடிகளையும் காதலி....
உன் உடலைக் காதலி....
உன் உயிரைக் காதலி...

இவ் உலகை அணு
அணுவாகக் காதலி...
மறுமையில் ஜன்னதுல்
பிர்தோஸைப் பெற
இலட்சியம் கொண்டு
அதைக் காதலி.....
வைரம், முத்து,பவளம்
கொண்டு கட்டப்பட்ட
சுவன வீட்டைக் காதலி....

தேன் ஆற்றிலும்,
பாலாறு களிலும்
அருந்தக் காதலி...

உன்னை சுற்றி
முத்துக்கள் போன்ற
குழந்தைகள் சுற்றி வரும்
அச் சந்தர்ப்பத்தைக் காதலி...
வேதனை இல்லா கப்ரைக்
காதலி....

கப்ரில் அழகான தோற்றம்
உள்ள நண்பன் உன்
அருகே இருக்கக் காதலி....

இவ்வாறாக காதலிப்பதற்க்கு
இவ் உலகிலும்
மறு உலகிலும்
எவ்வளவோ சுகங்கள்
இருந்தும் உனக்கு ஏன்
இந்த கேவலமான
அவல நிலை

அந்நிய ஆண் என்று
தெரிந்தும் அவனோடு பேச,
அவனை நம்பி உன்
வாழ்க்கையை இழக்க
அற்ப சுகத்திற்க்காக
அத்தனையும் விட்டு
அவனோடு போக உனக்கு
ஏன் இந்த பைத்தியம்?
விடு இதனை

உன் கண்களில்
போடப்பட்ட
இந்த கறுத்த
கண்ணாடியை நீக்கு

அழகு எனும் பெயரில்
நீ அணியும் ஆபாசத்தை
நீக்கு வெளியில் வா!!!

உன்னை சுற்றி உள்ள
உன் உறவை பார்
அவர்களின்
சந்தோஷத்திற்க்கு
உன்னால் முடிந்த
முயற்சியை முயன்று பார்

வெற்றி நிச்சயம்
உனக்கு!!
இவ்வுலகிலும்
மறுஉலகிலும்



# ஏமாற்றமா? நிலைமாற்றமா?


**SALHA RAJON**, 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA


பல தடைகள் கடந்து
சில படைகள் படைத்து
கனவு எனும் சிற்பம் செதுக்க
கல்வி எனும் கல்லைக் கொண்டு
உன்னை உலியாக்கினாய்

சிறு சிரமம் எனத் தேற்றி
உன் மனவலிமை காட்டி
பொறு பதிவுகள் பதிந்திடுவாய் ஒன்றல்ல
ஓய்வதுமல்ல ஓங்கிடும் உன் பாதை

விரல் அளவில்! விரல் நுனியில்! என
வையகம் எங்கும் வீர நடை போட்டதே!!!
எதிர்பார்ப்புகளில் ஏற்றம் காண
எதிர்ப்புக்களோடு ஏங்கிய ஒரு கூட்டமே!!!

விடியலோ விசும்பு தொடட்டும் என
நெஞ்செங்கும் நனவுகளை நட்டு
தொலைநிலைக் கல்வியில் காலடி
எடுத்து வைத்ததே ஒரு எட்டு

ஒரு பங்கு பெருமிதம் கொண்டு
வசதி வாய்ப்பின் படகிலேறி
கங்கையில் நீர் குடிக்க
இன்னொரு பங்கோ கரையோர
எல்லையில்

ஏமாற்றமா? நிலைமாற்றமா?
என்ற கேள்விக்கு பதில் தேடுகிறதே....

கல்வியின் கங்கை
களங்கமற்றதுதான் இருந்தும்
அதில் பயணம் செய்ய
பணையம் வைக்க வேண்டும்
அல்லவா இந்த ஏற்றத்தாழ்வை

மனம் வெறுக்க ஒருசிலர்
குணம் பொறுக்க ஒருசிலர்
அறிவு பெருக்க ஒருசிலர்
அகந்தை அடக்க ஒருசிலர்
பணம் பிரிக்க ஒருசிலர்
தரம் தழைக்க ஒருசிலர்
விடை வளர்க்க ஒருசிலர்
வரைமுறையின்றி
கிளை விரித்த கல்வி மரம்
மதிப்பீடு செய்ய மதியற்றது
அது விதி வெல்லும் மதிப்புடையது

கல்வியோ! கனவோ!
அவனும் சரி அவளும் சரி
சரித்திரம் படைக்க
சரிவுகளை சரிசெய்தே
சிரம் தாழ்த்தி சீர் தூக்குகின்றனர்.

# கொரோனாவின் கொடூரம்

**SAJIDHA SALIDHEEN, 2ND YEAR**
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

ஏ மனிதா! உன்னை நீ
ஒரு கணம் சிந்தித்துப்பார் !
உன் ஒவ்வொரு
கணப் பொழுதும் எவ்வாறு
கழிகின்றது என்பதை....

எங்கோ பிறந்த மனிதன்
இன்று எங்கோ
அடக்கம் செய்யப்படுறான்
தன் இறுதி கிரிகைகளுக்கு கூட
உடன் பிறப்புகளுக்கு வாய்ப்பில்லை
இதை நீ ஒரு முறையேனும்
சிந்தித்துப் பார்த்ததுண்டா???

எப்படிப்பட்ட மாட மாளிகையில்
வாழ்ந்தாலும் எத்தனை ஆயிரம்
பெறுமதியான வாகனத்தில் பயணித்தாலும்
கொரோனா என்னும் கொடிய வைரசுக்கு
உயர்ந்தோர் தாழ்த்தோர் என்ற
வேற்றுமை கிடையாது
கண் இமைக்கும் நொடிப்பொழுதில்
சட்டென்று தொற்றிக் கொள்ளும்

உன் பொன்னான நேரங்கள்
மண்ணாகிப் போகின்றன,
இன்று சமூக வளைத்தளங்களில்
வீண் வேடிக்கை விளையாட்டில்.....
எங்கு சென்றாலும் எதை எடுத்தாலும்
ஒன்லைன் மயமாக்கம்
உலகெங்கும் தில்லாடுகின்றது
உன்னை வீட்டுக்குள் முடக்கிவிட்டு...
ஏன் இதை நீ ஒரு கணம்
சிந்திக்கத் தவறுகிறாய்??
உன் பெறுமதி மிக்க நேரங்களை
சிறப்பாக கழிப்பதற்கு........

மனிதா!!!! இறைவனை
நெருங்குவதற்கும் உன் அன்பான
உறவுகளுடன் ஒட்டி உறவாடுவதற்கும்
இது அரிய சந்தர்ப்பம் என்பதை
மறந்து விடாதே...

நீயோ வயிறாற சாப்பிடுகின்றாய்
ஒரு வேளை தவறாமல் - ஆனால்
எத்தனை உயிர்கள் - இன்று
பசியால் துடிக்கின்றன
இதை நீ ஒரு கணமேனும்
சிந்தித்துண்டா.....???

ஏ மனிதா!!
துன்பங்களை கண்டு
துவண்டு போகாதே!!
ஒரு நொடிப்பொழுதேனும்
இறைவனை மறவாதே...
உனக்கு வரும் துன்பங்கள்
எல்லாம் உன்னை
சோதிப்பதற்கே என்றும்
பொறுமை எனும் அணிகலனை
போர்வையாய் போர்த்திக்கொள்
நிச்சயம் வெற்றி பெறுவாய்

எண்ணங்கள் சிறப்புற்றால்
வாழ்க்கையும் சிறப்புறுமே
நித்தம் நித்தம் இறைவனை
நினைத்து நன்மைகள்
பல செய்து இறைதிருப்தியுடன்
இறைவனை சந்திப்போம்
இன்ஷா அல்லாஹ்.....

# அடையக்கூடுமோ எனது அடைவுகளை??

**FATHIMA BADUSHA HUSSAIN, 3RD YEAR**
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA



கொரோனாவே
உன்னைப் போன்று
ஒரு கொடுங்குணம் கொண்ட
ஒரு உயிர்க் கொள்ளி
இந்த உலகையே இனி
ஆட்கொள்ளக் கூடாது
என இறைவனை பிராத்தித்தவளாக!

என்னவொரு பிறவியோ நீ!!
எல்லாப் பிறவிக்கும்
மரணம் ஒன்று இருக்கையில்
உனக்கு மட்டும்
அதன் வாசனை கூட இல்லை!!
என் பல்கலை வாழ்க்கையில்
நீள வானம் தெரியும்
இடமெல்லாம் நீந்திச் சிறகடிக்க
ஆசைப்பட்டேன்....

நீட்ச்சியுடனே
நீயும் வந்தாய்!!
மீழ்ச்சியில்லா ஒரு
நோயைத் தந்தாய்!!
என் பல்கலைக்கழக
உள்நுழைகைக்கு
முற்றுப்புள்ளி வைத்து,
வெளியேற்றுகைக்கு
தொடர்புள்ளி வைத்தாய்....
தொடர்கிறது இன்றும்
தொந்தரவு கொண்ட
தொலைநிலைக் கல்வியால்!!

வெண்கட்டி கோளுடனும்,
கரும்பலகை கைகலப்புடனும்
இரண்டறக் கலந்த இயல்பு
கல்வி வாழ்க்கையில் இன்று...
இணையத்தளக் கல்வி என்பார்!,
டேட்டாக்களுக்காய் பல
நூறு ரூபாய்களுக்காய்
கார்ட்கள் போடும் என்பார்!!
ஜூமுக்கு என்று பாடங்களுக்கு
லிங்க் வரும் என்பார்!!



அதனுள்ளே நுழைவதற்கு
பாஸ்கோர்ட் கேட்பார்!!

இடையிடையே
இடையூறாக
நெட்வர்க் கனெக்ஷன்
சிக்கல் வேறு!!
கொஞ்சம் கூட மறவாது
செல்பபோனும் கூட
என் உயிரைக் காப்பாற்று
என்று கூச்சலிடவே
சார்ஜ் வேறு!!
வட்சப் குரூப்கள்
மலிந்து போனது...
நோட்ஸ் போட்டோக்களால்
ஸ்டோரேஜ் புள் ஆகிறது!!
லெப்டோப்ளையும்,
டெப்களையும்
தேடி காசுத்தாள்கள்
பறக்கிறது!!
தலைவலியுமாய்,
கண்ணாடியும்
பட்டதாரிகள் காலம் கழிகிறது..

இயல்புநிலை மாற்றி
இருண்ட யுகத்தை
கொணார்ந்த
கொரோனாவே,!!
புரியாத புதிராய்
புரட்டிவிட்டாயே
நேரடிக் கல்வியின்
சுகமதனையும்,
பயன்களதனையும்!!
இலட்சக்கணக்கான
இலக்குகளுடனும்,
அடைவுகளுடனும்
கல்வி சுமந்து
இலங்கைத்
தென்கிழக்கில்
கால் பதித்தேன்!!!

அடைத்துவிட்டாயே
ஒற்றைப் பூட்டு கொண்டு உலகை!!
திறக்கச் சாவியின்றி
அழைந்து திரிகிறது
எனது கல்வி இலக்குகள்...

# இணையவழிக் கல்வியும் பல்கலைகழக மாணவர்களும்..

கொரோனாவின் பிடியில்
தொலைநிலைக்கல்வி
இணையத்தின் வழியே
அடுக்கடுக்காய்ப் பாடங்கள்
பிணையமாய் மாட்டினரே
பல்கலை மாணவர்கள்...

துள்ளியெழுந்து காலையில்
விரைந்த பல்கலையில்
எள்ளி நகையாடி
மகிழ்ந்த பல்கலையில்
முகமோடு முகம்பார்த்து
முகமன் கூறி...

அகமோடு அகம் கண்டு
அளவளாவி
அன்பும் கண்டிப்புமாய்
விரிவுரையாளர்கள் கற்பித்த
இன்பமாய் கற்றிட்ட
நாட்களும் கடந்தனவே...

ஆசையாய் நோக்கிய
கணினியும் இன்று - ஆசிரியரானதே
ஓசையோடு மாணவனை
புரியாமல் அழைக்கிறதே
சில நேரங்களில் - தடைப்பட்ட
இணைப்பால் பல பாடங்கள்
கடந்தும் ஓடிப்போனதே...
மாணவன் மனதில் எட்டிப்பார்க்கும்
சோம்பலை - சள்ளையான
இயந்திரம் தான் அறிந்திடுமா???
இனிக்க இனிக்க முன்கற்ற
பாடங்கள் - தெவிட்டத்
தெவிட்ட திணிக்கப்படுகிறதே!!!
மனித மூளைக்கும் இயந்திர
மூளைக்குமிடையே
புனிதப் போரிங்கே மூண்டு விட்டதே
இத்தனையும் இருக்க - நம்
ஏதிர்பார்ப்புக்களும் தகர்ந்தனவே...

இணையத்தில் கற்க
ஐயம் தெளிவிக்க
துணைக்கருவி ஏதுமில்லை
துயரத்தில் பல்கலை மாணவர்கள்...




**A. ASRA BANU, 2ND YEAR**
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

S.A. BUSHRA, 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

# அழையா விருந்தாளி கொரோனா!

அழகாய் இல்லாவிட்டாலும் – கொஞ்சம்
அர்த்தமுள்ளதாய் நகர்ந்த நாட்களை
அடியோடு புரட்டிப் போட்டது – இவ்
அழையா விருந்தாளி கொரோனா!

தொடுதிரை உதவியுடன்
தொலைநிலைக் கல்வி
தொடும் தூரத்தில் வந்த போதும் – அதை
உள்வாங்கும் திறனென்னவோ
தொலைந்தது உண்மையே..!

இடைநடுவில் விடப்பட்ட கல்வி
செயலிகள் மூலம் தொடரப்பட
அடைவு மட்டங்கள் மாத்திரம்
ஏனோ நகர மறுக்கின்றன..!

ஒரே அறையில்
ஒன்றாய் ஒலித்த குரல்கள்
பல மைல்களுக்கப்பால் இருந்து
ஒழுங்கின்றி ஒலிக்க
கல்வித் திட்டங்கள் கரை காணுமா?!

கல்விக்கு கைகொடுக்கவென
கையிலெடுக்கப்பட்ட கைப்பேசிகள்
உயிர் காவிச் செல்ல
தூர நோக்கோடு செயற்பட வேண்டிய
மாணவர் சமூகமோ – இன்று
துவண்டு போய் கிடப்பதற்கு
யாரை குற்றம் சொல்வது?!

இணைய வழியாய் வரும் போது
இலவசக் கல்வியும்
போக்குவரத்துச் செலவு
எடுத்துக் கொள்ளும் போது
ஏழை மாணவர்களின் நிலை
கேள்விக்குறி அல்லவா!

பாடத்திட்டங்கள் முதல்
பரீட்சைகள் வரை
யாவும் தள்ளாடிக் கொண்டிருக்க
மாணவரின் கல்வி இங்கு
ஊசலாடுகிறது..!

என்ன தான் முயன்றாலும்
வழமைக்கு திரும்ப முடியவில்லை...
நிச்சயமாய் வரலாறு நெடுகிலும்
கறை படிந்த பக்கங்களாய் – இவை
என்றென்றும் பதியப்பட்டிருக்கும்..!

# கொரோனாவின் அலையில்
# தொலைநிலைக் கல்வி

உதித்த சூரியன்
அளித்த ஒளியில்
விழித்தது கண்கள்
கல்விக் கோபுரங்கள்
உயர்ந்து ஒளி வீசி
எம்மை வரவேற்றன
திங்கள் மதியோடு
இன்னிசைத் தென்றல் வீசிட
நகர்ந்தன நாட்கள்.

தென்றலை ஓய்வுறச் செய்து
நாளும் - மக்களை
தினறலை செய்யும்
கொரோனா - உன்னால்
வசந்தக்கல்வி தொலைந்தது
இணையத்தின் கையிலே - நாட்கள்
நகர்ந்திட நீயும் வழி ஏதுமில்லை
என்று வாரிச் சுருட்டுகிறாய் எம்மை.

உன் அலைகள் ஓய்வின்றி
மோத - கல்வி தன் பயணத்தை
தொலைநிலை வழியிலே தொடர்கிறது
என் ஏழ்மைக் குவியலில்
கடன் வழித் தொலைபேசி
கண் வலித்திட மனம் சோர்ந்திட
என் இலக்கை உன்னால்
வென்றிட முடிந்திடுமோ?

கற்றோர் உயர்ந்து
பேதமை நீங்கிட வேண்டும்
மற்றார் முன்னில்
சாதனை புரிந்திட வேண்டும்
உற்றார் உலகு "அறிஞன்"
என்று உரைத்திட வேண்டும்
என்றோர் எதிர்பார்ப்புகள்
சரிந்திடவோ......
நீ மார்தட்டிக் கொள்கிறாய்.

ஆயிரம் கனவுக் கோட்டையில்
மிதந்த பல்கலைக்கழக நாட்கள்
ஓராயிரம் குமுறல்களோடு
இணையத்தில் சிக்க வைத்தாய்
பல்லாயிரம் நண்பர்களை
எமை விட்டும் தூரமாக்கினாய்
ஆயிரம் நாட்கள்
நகர்ந்தாலும் என்
இலட்சியக் கல்வி
அனுபவத்தை
உன்னால் தந்திட இயலாது.

என் இலட்சியப் பயணம்
ஓய்வின்றி தொடர்ந்திட
வசந்தகால இன்னிசைத்
தென்றலை சுவாசித்திட
தொலைநிலைக் கல்வி
முகநிலைக் கல்வியாய்
ஜொலித்திட கொரோனாவே,
உன் பயணம் ஓய்ந்திட
வேண்டும் - நாம் கல்வியின்
ஒளியால் ஓங்கிட வேண்டும்.

**B. FATHIMA AAKKILA, 2ND YEAR**
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA





# விசித்திரமான விந்தை நீ


**MOHAMED RAZOOK FATHIMA RIFANA**
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA


வூஹானில் பிறந்தாய்
சீனாவில் வளந்தாய்
எல்லா நாடுகளிலும் உன்
சந்ததிகளை பரப்பினாய்
இவ் உலகையே புரட்டி போட்டாய்
ஏழை பசியை உணர்த்தினாய் - நீ
வைத்திய கழிவினால்
இவ் சூழலையே மாசடைய செய்தாய்
மானிட உயிரையும் பறித்துக் கொண்டாய்

பொருளாதாரத்தை சுரண்டினாய்
நாடுகளுக்கு இடையே உள்ள
உறவையும் துண்டித்தாய்
வல்லரசு நாட்டையும்
கதிகலங்க செய்தாய்
இத்தனையும் செய்த - நீ
விட்டு வைக்க வில்லையே
கல்வியை காசாக்கினாய் - நீ

இலவச கல்வியை
இணையவழி கல்வியாக்கினாய்
இலவச கல்விக்கே நீ - இன்று
முற்றுப்புள்ளி வைத்து விட்டாய்
வசதி படைத்தோருக்கு
கல்வியை உரித்தாக்கினாய்
குடிசையில் பிறந்தவனுக்கு
கல்வியை கனவாக்கினாய்
ஏழையின் துயர் தீர்த்த கல்வியை - நீ
கேள்வி குறியாக்கினாய்

மாசற்ற மனம் படைத்த
மாணவனின் கல்வியை
இடை நிறுத்தினாய்
கல்வியை தேடும் குழந்தையையும்,
கூலி வேலை செய்ய வழிவகுத்தாய்...
கல்வியே கதி என்று நின்றவனுக்கு
எதிர்காலத்தை கனவாக்கினாய்
கல்வியை விட்டு தூர விலகியவனுக்கு
கல்வியின் தேவையை உணர்த்தி நின்றாய்
கண்ணுக்கு புலப்படாத
வைரசாக உருகொண்டு
உலகையே புரட்டிப்போட்டாய்

நீ நினைத்து விட்டாய்
புத்தக கல்வி மட்டுமே
கல்வி என்று நீ செய்த
கோலம் என்னவோ
அனுபவமும் கல்வியானது,
அறிவியலும் மாணவன் மத்தியில்
அதிசயமானது
சிந்திக்காத பாமரனையும்
சிந்திக்க தூண்டியது
புத்தக பூச்சிகளாக இருந்தவனையும்,
உலக நடப்பை அறிய செய்தது.
உன் திருவிளையாடலே இருண்ட
பக்கங்களை ஒளி மயமாக்கியது
சரித்திரங்கள் பல படைத்து உலகை
மாற்றியமைக்க வழிகாட்டியது.

சிந்திக்காதவனையும்
சிந்தனையாளனாக உருமாற்றியது
நூலின் வாடையை நுகராதவனையும்
இன்று புது நூலகங்களை
உருவாக்க வழி அமைத்தது
விதியை மதியால் மாற்றிய நீ
இப்பாரையே திரும்பி பார்க்க வைத்து
விசித்திரமான விந்தையானாய்......!

# தொலைநிலைக் கல்வி

**JAZEEL SAMEEMA, 2ND YEAR**
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

தவமாய் கிடந்து
குரவிடம் குருகுலக்
கல்வி பயின்று
காலெட்டு வைத்து
திண்ணைப் பள்ளியிலே
கைக் கலைகள் பல கற்று
பாடவிதானத்தோடு பண்புகளையும்
இணைத்தே பயின்ற
பாடசாலைக் கல்வியோ..!

இன்று அடைப்பட்டு
ஓராண்டிற்கு மேலாய்
நெடுங்காலமாய் திறவா
நெடுங்கதவாய் மூடப்பட்டு
மூச்சற்று கிடக்கிறது.
இக்கொடிய வைரஸான
கொரோனாவின் தோன்றலால்.

மூச்சற்று கிடக்கும்
அவைகளினால் நம் உயிர்
மூச்சான கல்வி என்றுமே
தடைப்படக் கூடாது என்ற தீராத
வேட்கையிலேயே வந்து
குடிபுகுந்தது இந்த
தொலைநிலைக்கல்வி.

வீட்டுக்குள் முடங்கினாலும்
நேரம் வீணாய் கழியாமல்
தொலைக்கல்வி கைகூடுகிறது எமக்கு
பள்ளியிலே புத்தகத்தை
தொட்டு படித்து உணர்ந்த
கைவிரல்களோ இன்று
இணைப்பை அழுத்துகிறது
பாடவிதானத்துக்கு.

இக் கல்வியோடு இணைந்து
நகர்கிறது நாட்களும்
பாடசாலை முதல் பல்கலை வரை
வாசலுக்கு செல்லாமலே
அறிவுத் தாகமோ தீர்க்கப்படுகிறது
கையடக்க தொலைபேசியோடும்
கணினியின் திரை முன்னமும்
காட்சியளிக்கிறது கல்வி.

அயராது பாடுபடும் ஆசிரியர்களும்
தொலைநிலையில் அடிக்கடி
மாணவர்களை அதட்டும்
குரலோசையும் அவ்விடம் உள்ளீரா?
என கரிசனையோடு அவதானிக்கையில்
பெற்றோரின் கவனமும்
அதட்டலில் திரும்புகிறது.





இணைய வழிக்கற்றலோ
இணைபிரியாத நண்பனாய்
உருவெடுத்து உள்ளங்கையிலே
ஏந்திய வண்ணம் எங்கெனும்
நடமாடுகிறது நம்முள்
அலுப்பூட்டும் தெரிந்த முகங்கள்
சலிப்பூட்டும் நிகழ்வுகளுக்கு
அப்பால் ஆர்வமூட்டும்
இந்நிலை கல்வி.

இருந்தபோதிலும்
இந்நிலைக் கல்வியில்
இன்னும் இணையாத
மாணவர்களின் நிலை தான்
என்னவோ ஒன்றுமே
அறியாத பாமரனின்
வாழ்வுதான் கேள்விக்குறியோ.

ஓர் அறையில் ஒன்பது
பேர் வசிக்கும் இடத்தில்
தொலைநிலைக்கல்வி
ஒரு மூலையிலே
இணைய வசதி இல்லாத
இடத்தில் இயலாது
போகிறது இக்கல்வி.

இக்கொடிய வைரஸின்
பிறப்பால் குழந்தை
மனமும் குழைகிறது.
பள்ளி செல்லும் பருவமதில்
வாசற்படியில் வைரஸ் நிற்கையிலே.

ஏ ! வைரஸே நீ
வாசலில் நின்றாலும்
வைராக்கியமாய் தொடர்வோம்
என் கல்வியை அது
அனைவருக்கும் சென்றடைய
வசதியும் செய்வோம் நீ வந்த
வழி பார்த்து செல் ஏன்
உனக்கு இத்தனை வீம்பு.

காலத்திற்கு ஏற்ப
மாற்றங்கள் அவசியம்
கல்வியிலும் அதை புகுத்தல்
உசிதம் என நடைபோடுவோம்
எம் போன்ற மாணாக்களை இணைத்து.

# தொடர்பற்ற ஒற்றை மாதிரி

JAILABDEEN PATHIMA SAMEERA, 1ST YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

இணையத்தின் இதயம்
சமூகமளிக்கும் புது வித கல்வி,
மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின்
ஊடாடும் செயல்பாடு,
நெகிழ்ச்சி கூடிய நெடுதூர
இலக்குடைய யாவராலும் கற்கும்
இரட்டைப் பக்க தகவல்
தொடர்பற்ற ஒற்றை மாதிரி
இத்தொலைநிலைக் கல்விக்கு,
ஓர் மாணவனின் பலக்குரல்களின்
ஆதங்க கவிதை இது.

கொரோனாவின் கோரக்கொடுமையில்
பைத்திய தாளம் போடும்
நம்பகமற்ற வாழ்க்கையில்..
இதுவும் கடந்து போகும் ஆனால்,
எதுவும் மறைந்து போகாது
என்ற பாணியில்...
தன் இலக்கை நோக்கிய
நகர்வு மாணவ சமுதாயத்திடம்.

திடகாத்திரமான போர்க்களத்தில்
மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான
திரை தொடர்புக்குள்
நெகிழ்ச்சியும் மகிழ்ச்சியும்
கலந்த ஒத்திசையுடன்
ஆர்வமாக கற்பவர்களும் உண்டு.
கைகிட்டிய கலையில் கற்க
வசதியற்றோரும் உண்டு.

பட்டம் பெற்று,
வெற்றி வாடகை சூட்டி
வாழ்வில் முன்னேற்றுப்படியில்
கால் தடயம் பதிக்க
வேண்டுமென்ற
மனதில் கொண்ட
ஆசைகளனைத்திற்கும்

கொரோனாவின் வறுமை
ஓர் பக்கம் வருத்தினாலும்
முடியும் என்ற தைரியம்.
தலைநிமிர்ந்த மாணவர்களின்
கல்வி நிலைமையோ எங்கினம்......?

தொலைநிலைக் கல்வியும்,
செய்முறைப் பயிற்சிகளும்
மாணவர்களின் கல்வியில்
தடுமாற வைக்கின்ற
அடையாளங்கள் ஏராளம்!
இணையத்தள கற்கையில்
நிகழும் அலப்பறைகளோ
தாராளம்!

என்றாலும் எல்லாம் இலகு
ஆனால், கவனம் குறைவு
எதிரும் புதிருமாக இணைந்து
இறுதி தருணத்தில்
அங்கீகாரம் பெறாத
பட்டப்படிப்பில் இருந்து விட்டோமா?
என புரியாத சில பேருக்கு...
தகுதி குறைந்த பட்டத்தின்
மதிப்பெண்ணை எண்ணி
ஆதங்கம் கொள்வது
ஒரு பக்க வீண் செலவு.

அதே சமயம்
பல இலட்சியக் கனவுகளோடு
புரட்சி செய்ய முன்னின்று
பல எதிரிகளை தடை தாண்டி
புதிர்களுக்குள் சிக்கி
நிறைந்த அனுபங்களோடு
பட்டம் பெற்று பல்தொழில்
புரிய உதவி புரிந்த
இத்தொலைநிலைக் கல்விக்கு
நன்சமர்ப்பணமோ மறுபக்கம்.

# என் கல்விப் பயணம்

**MOHAMED NIYAS FATHIMA SASNA**
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

பல கனவுகளுடனும்
பல போராட்டத்துடனும்
தொடங்குகிறது என் பயணம்..

இலக்கை நோக்கிய
என் பயணத்தில்
தடைகளை உடைத்து
தன்னம்பிக்கையுடன்
கல்வி ஒன்றின் துணை கொண்டு
ஆயத்தமாகினேன்..

என் பயணம்
முடிவில்லாது செல்ல வேண்டும்
என ஆசைபட்டேன்
பேராசையோ என்னவோ தெரியவில்லை

பயணத்தை தடுக்க
சீற்றம் கொண்டது கொரோனா.
கடவுளின் விதியும்
மனிதனின் மதியும்
சதி பூண்டது

இணைய வழிக்கல்வி என்ற பெயரில்
பாதி வழி புரிந்தும்
மீதி வழி புரியாமலும்
தவிக்கிறேன் பயணத்தின் நடுவில்.
வழிகாட்ட என் குருவின் கைவிரல்
இங்கு இல்லை

கரும்பலகை நாயகனும்
வெண்பலகை நாயகியும்
இடைவிடாது நோக்கினாலும்
எனக்கு தலைவலி வரவும் இல்லை
பயணம் தடைப்படவுமில்லை
புத்துணர்ச்சியுடன் தொடர்ந்தது.
ஆனால் இன்று இணைய வழியில்
தொடுதிரையில் என் இரு விழிகள்
வழியின் பயணத்தில்
கிறுகிறுகித்துப் போகிறேன்.

அதிகாலையில் பாடசாலை நோக்கி
துள்ளி ஓடிய என் கால்கள்
இன்று துளிகூட அசைய மறுக்கிறது
என் நாட்காளிக்குள்.

முடக்கிக் கொண்டது கணினி
மேசையில் முன் மண்டியிட்டு

எத்தனை காலம் இவ்வாறு பயணிப்பது
பயணம் தொடர இங்கு இலவச கல்வி
இல்லையே..
இணைய வழியில் இணைந்திட
எத்தனை முறை கடன் வாங்குவது

இணைந்திட பணமும் இல்லை
இலக்கை அடைந்திட
வழியும் இல்லை

இளைப்பாறுகிறது என் பயணம்.
வீட்டிற்குள் நான்கு அறைக்குள்
முடக்கப்படுகிறது
சிறகொடிந்த என் கல்விப் பயணம்...

# කොරෝනා නුඹ ඇවිදින් දැනට අවුරුදු දෙකක්......

**S.A. FATHIMA SAJANA, 2ND YEAR**
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

නොසිතූ මොහොතක නොසිතූ
ලෙසකට....
කොරෝනා නුඹ ඇවිදින්
දැනට අවුරුදු දෙකක්
වෙනස් කරපු හැටි ජීවිතයම
මට නම් මහ පුදුමයක්
වෙනදා වගේ නොවුනත් නුඹත්
වෙනස් කලා මුළු ලෝකයත්
නමුත් නුඹ කළ අරුමය
විය කියා දෙන්නට මනුසත්කම
ආදරය
අවිනිශ්චිත බව
හා පරෙස්සමත්
සීමා වුවත් තුරුණු වූ කල් අපේ
ඔන්ලයින් මගින්ම විදිහට ජීවිතේ
කොරෝනා නුඹ ඉගැන්නුවා අපට
පවුලේ සමගිය හා සතුට
ඒ විතරක්ම නොවේ තව
ගෙවත්තක අසිරිය
පවිත්‍රතාවය, ආරක්ෂාව,
ආදරය,සෙනෙහස
හැම දේම අඩු නැතිව.............



# التعليم عن بعد بين توقعاته وتحقيقاته إثر ظروف كوفيد

**RASHIDHA AMEEN**, 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

بسبب جائحة كورونا،اضطرت ملايين الأسر حول العالم إلى خوض تجربة التعليم عن بعد لأولادها،ومع مرور الوقت،بدأت نتائج هذا النوع من التعليم في الظهور. فما هي التأثيرات على التالميذوكيف انعكس على مهاراتهم وخبراتهم؟

بعد البحث في بيانات تم تجميعها من جميع أنحاء العالم بشأن التعليم عن بعد خالل جائحة كورونا،توصلت دراسة ألمانية حديثة إلى أن التجربة تسببت في "نتائج سيئة ومخيبة للأعمال"،للتالميذ،وفقا للدراسة.

ففي مراجعة منهجية باستخدام قواعد بيانات علمية من دول العالم،اطلع الباحثون في جامعة غوته بمدينة فرانكفورت الألمانية على الدراسات التي تناولت آثار إغالق المدارس بسبب الجائحة على آداء ومهارات تالميذ المدارس.

وأوضح أستاذ علم النفس التربوي في جامعة غوته والمشارك في الدراسة،أندرياس فراي،أن متوسط تنمية المهارات أثناء إغالق المدارس في ربيع ٢٠٢٠ "يمكن وصفه بالركود مع ميل إلى التراجع في المهارات المكتسبة،وبالتالي فهو يقع في نطاق مماثل لتأثير العطلة الصيفية"،علي حدوصف فرايت.

وأكد فراي على قيام فريق البحث بالنظر فقط في الدراسات عالية الجودة من حيث منهجية البحث،"والتي تسمح باستخالص استنتاجات واضحة حول تأثير إغالق المدارس على اكتساب أطفال المدارس للكفاءات عبر تطبيقها اختبارات مناسبة لقياس الأعداء أو الكفاءة".

وأضاف فراي عن فقدان المهارات الطالب "يظهر بصورة كبيرة"بين الأطفال والمراهقين المنحدرين من أسر محرومة اجتماعية، على حد تعبيره.كما يرى فراي أن ذالك يأكد الإفتراضات السابقة التي قدمتها الأدلة التجريبية حول الفجوة بين الأغنياء والفقراء," واتساعها بشكل أكبر خالل إغالق المدارس ألول مرة بسبب كورونا".

ولكن في المقابل،يرا فراي أن هناك أيضا مؤشرات أولية على أن تأثيرات إغلاق المدارس مع بداية فصل الشتاء الماضي لم تكن بالضرورة ذات وقع بالغ "حيث تحسن في تلك الأثناء التدريس عبر الإنترنت في العديد من الأماكن".



# التعليم عن بعد بين توقعاته وتحقيقاته

## اثر ظروف كوفيد ١٩

**A.J.M. AZAM**, 1ST YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

يشهد العالم حاليا جللا قد يهدد التعليم بأزمة هائلة ربما كانت هي الأخطر في هذا العصر الراهن .فحتى ٢٨ مارس /آذر ٢٠٢٠ ،تسببت جائحة فيروس كورونا (كوفيد-١٩) في انقطاع أكثر من ١,٦ مليار طفل وشاب عن التعليم في ١٦١ بلدا ، أي مايقرب من ٨٠٪ من الطلاب الملتحقين بالمدارس على مستوى العالم .وجاء ذلك في وقت نعاني فيه بالفعل أزمة تعليمية عالمية، فهناك الكثير من الطلاب في المدارس ،لكنهم لا يتلقون فيها المهارات الأساسية التي يحتاجونها في الحياة العملية.

ولكن ماهي الآثار المباشرة التي تعود على الأطفال والشباب، والتي تثير لدينا القلق في هذه المرحلة من الأزمنة؟ ١.خسائر التعلم ٢ زيادة معدلات التسرب من الدراسة ٣.عدم حصول الأطفال على أهم وجبة غدائية في اليوم والأكثر من ذلك ، انعدام المساواة في النظم التعليمية ،الذي يعاني منه معظم البلدان .ولا شك أن تلك الآثار السلبية ستصيب الأطفال الفقراء أكثر من غيرهم ؛وكأن المصائب لا تأتيهم فرادى.

والجدير بالذكر.فاننا نشهد في هذا الصدد قدرا كبيرا من الابداع بالعديد من البلدان.فالكثير من وزارات التعليم ينتابها قلق له بالفعل ما يبرره من الاعتماد على الاستراتيجيات المستندة الى الانترنت دون غيرها .وبالتالي لايجني ثمرتها الا أبناء الأسر الأفضل حالا .وتتمثل الاستراتيجية المناسبة الأكثرية البلدان في استخدام جميع الوسائل الممكنة التي توفرها البنية التحتية الحالية في ايصال الخدمة.فيمكن استخدام أدوات الانترنت في اتاحة مخططات الدروس ،ومقاطع الفيديو،والدروس التعليمية ،وغيرها من الموارد لبعض الطلاب ،ولأكثر المعلمين على الأرجح.ولكن، ينبغي أيضا الاستعانة بالمدونات والتسجيلات الصوتية والموارد الأخرى التي تستهلك قدرا أقل من البيانات.

كما الاذاعة والتلفيزون من الأدوات التي لا ينبغي الاستهانة بجدواها كذلك.ويمكن الاستفادة من الميزات التي توفرها لنا شكات التواصل الاجتماعي ، مثل"واتساب ويوتوب" أو الرسائل النصية القصيرة، في تمكين وزارات التعليم من التواصل بفعالية مع الأهل والمعلمين،لتزويدهم بالاشارات والتعليمية فهيكل عملية التعلم ،مستعينة بالمحتوى المقدم عبر الاذاعة أو التلفيزيون،فلا يقتصر التعلم عن بعد على استخدام الانترنت فقط، ولكنه ينطوي على تعلم يعتمد على مجموعة متنوعة من الوسائط التي تكفل وصوله الى أكبر عدد ممكن من طلاب اليوم.

ربما ترتب على صدمتي اغلاق المدارس والكساد العالمي تكاليف طويلة الأمد أن صدمة اغلاق المدارس أن تتسب في خسارة التعلم، وزيادة معدلات التسرب، واتساع فحوة عدم المساواة ؛وستؤدي الصدمة الاقتصادية الى تفاقم الضرر، من جراء تراجع العرض والطلب في مجال التعليم.

هذه العواقب الوخمية والآثار طويلة الأجل على وجه الخصوص-ليست حتمية.
لا شك أن التعليم سوف يتكبد تكاليف باهظة،وكذالك كل قيمة لدى المجتمعات، على الأمد القريب ولكن اذا بادرت البلدان الى التحرك دعما للتعلم المستمر، فستتمكن من الحد هذا الضرر،ولو جزئيا،ومن خلال التخطيط السليم والسياسات السديدة،يمكنها استغلال الأزمنة في ايجاد الفرصة لبناء أنظمة تعليمية أكثر شمولا وكفاءة وقدرة على الصمود

